தென்மொழி

ரித்தமிழ் இலக்கியத் திங்கள் இதழ்

மிழைச், செந்தமிழ் நாட்டைச் சிறை மீட்க
ர் உள்ளத்தில், வையம் நடுநடுங்கும்
னல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!"

— பாவேந்தர்

டை (வைகாசி) தி. பி. ௧௯௯௭.



பாரதிதாசன் நினைவிதழ்

50 காசு

''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை,'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!.

சுவடி 4 | வைகாசி தி. பி. ௧௯௯௭ (1966 மே) | ஓலை 4

தமிழியக்கம் தொடங்குக!

தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டின்
முதலமைச்சாய் வருதல் வேண்டும்!
தமிழ்ப் பகைவன் முதலமைச்சாய்த் தமிழ் நாட்டில்
வாராது தடுத்தல் வேண்டும்!

— என்பது பாவேந்தர் பாரதிதாசனின் தமிழியக்க முழக்கம்; இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுப்பிய புரட்சிக்குரல் இது. இன்று அக்குரலுக்குரியவர் நம்மிடை இலரெனினும், அக்குரல் இத் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலும், சந்தி சதுக்கங்களிலும் எதிரொலித்துக் கொண்டுள்ளது. ஆனால் இக்குரலின் கருத்து செயலாக்கப்பட்டதா? தமிழ் நாட்டில் உள்ள தமிழர்கள் இதுபற்றிக்

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர் : தங்கப்பா.
உரிமை, வெளியீடு : தாமரை, உலக முதல்வி.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

கவலைப்பட்டனரா? இல்லை; அறவே இல்லை. ஏனெனில் இன்று தமிழர்களின் நெஞ்சங்கள் அடிமைப்பட்டுக் கிடக்கின்றன; அவர்தம் மூளைத்திரளையுள் இருள் மண்டிக் கிடக்கின்றது; அவர்தம் முதுகெலும்பு கோணியுள்ளது; அவரின் கைகள் கட்டப் பெற்றும், கால்கள் மண்டியிடப் பெற்றும் கிடக்கின்றன. இல்லையெனில் அவர்களில் சிலராகிலும் இதுபற்றிக் கவலைப் பட்டிருக்க வேண்டும்; சிலராகிலும் எழுச்சியுற்றிருக்க வேண்டும்! ஒரு சிலராவது இப்பாடல் வரிகளுக்குப் பொருள் எழுதியிருக்க வேண்டும். அந்நிலை எழாத வரை, பாரதி தாசனுக்கு நினைவிதழ்கள் வெளியிட்டுப் பயனில்லை; நினைவு விழாக் கொண்டாடிப் பயனில்லை; அஞ்சல் தலை வெளியிட்டுப் பயனில்லை; எல்லாம் வெறும் ஆரவாரம்! வயிற்றுச் சோற்றுக்கும் சட்டைப் பைக்கும் வகைதேடும் வழிமுறைகள்!

தமிழ் நாட்டில் தமிழ்தான் ஆட்சி மொழியாக இருத்தல் வேண்டும் என்று ஒருநிலை ஏற்பட்டவுடன் ஆங்காங்குள்ள அரசினர் அலுவலகங்களில் பணியாற்றும் உண்மைத் தமிழன்பர் ஒருசிலர் தங்கள் தங்கள் அறிவுக் கெட்டியவாறும் உணர்வுக்குத் தக்கவாறும் தங்களைப் பொறுத்த மட்டில் ஓரிரண்டு ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழிலேயே அறிக்கைப் பலகைகளை எழுதித் தொங்கவிட்டு அழகு பார்த்தனர். இவற்றிற்கு அரசினர் பாராட்டுக்கூட கிடைக்கலாம் என்பது அவர்களின் கனவு. சென்னை மாநில மின்சாரக் களரியில் அலுவல் பார்க்கும் தமிழன்பரும் தென்மொழித் தொண்டருமான ஒருவர் தாம் அலுவல் தொடர்பாக எழுதும் மடல்களைக்கூட தூயதமிழிலேயே எழுதவும் கையெழுத்திடவும், தம் அலுவல் துறை ஆங்கிலச் சொற்களையெல்லாம் தமிழ்ப் படுத்தி எழுதி மேலதிகாரிகளுக்கு விடுப்பதுமாக இருந்தார்; அதன் விளைவாகக் கண்டிக்கவும் பட்டார். அது போலவே ஊர்காவல் துறையில் இருந்த தமிழன்பர்களும், ஊராட்சி ஒன்றிப்புகளில் இருந்த மெய்த் தமிழன்பர்களும், 'போலீஸ் ஸ்டேஷன்' என்றும் 'கமிஷனர்' என்றும் முதலில் எழுதியிருந்த இடங்களிலெல்லாம் 'காவல் நிலையம்' என்றும் 'ஆணையாளர்' என்றும் தூய தமிழில் மொழி பெயர்த்து எழுதி மகிழ்ந்தனர். இந்தத் தமிழ் வளர்ச்சியைக் காணப் பொருத தமிழக முதலமைச்சர் 'அப்பெயர்களை உடனே மாற்றி அவற்றை முன்போலவே எழுதவேண்டும்,' என்று ஆணை பிறப்பித்துள்ளாரம். இவரின் கிறுக்குத் தனத்திற்கு முடி வைத்தாற்போல் உள்ள செய்தி ஒன்றைக் கோவை அனைத்துக் கல்லூரி மாணவர் மன்றச் செயலாளர் நமக்கு அறிவித்துள்ளார்.

வரும் கல்வியாண்டிலிருந்து புகுமுக வகுப்பில் தமிழில் பாடம் கற்றுத் தருவதற்கென்று கோவை அரசினர் கலைக் கல்லூரியில் கல்லூரி ஆசிரியர்கட்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இப் பயிற்சி விழாவில் கலந்துகொண்ட திரு. பக்தவத்சலம் தமிழில்தான் உரையாற்றினாராம். ஆனால் அமிழ்தினுமினிய தமிழ் என்ற சொல்லைச் செருக்குடன் 'டமில், டமில்' என்றே சொன்னாராம். இத்துடன் 'கமிஷனரை' ஆணையாளர் என்று சொல்லுதல் கூடாதென்று கூறியதுடன், அவ்வாறு சொல்வதை நையாண்டியும் செய்தாராம். தமிழ் பற்றி நையாண்டி மேளங் கொட்டும் இந்தத் தருக்கர் அத்தகைய செயலைத் துணிவுடன் செய்யும்படி விட்டது யார்? தமிழர்தானே! இத்தகையவர்களைத்தானே பாவேந்தர் பாரதிதாசன் முதலமைச்சர் களாய் வாராது தடுக்கச் சொன்னார். அவர் கண்டு சொன்ன இந்த எச்சரிக்கையை நாம் கைக்கொண்டிருந்திருப்போமானால் இன்று தமிழ் 'டமில்' என்று பலுக்கப்பெற்று நம் மானத்தை விலை போக்கி யிருக்குமா?

எனவே பாரதிதாசன் கூறிய கருத்துகளை வெறும் இசை தழுவிய பாடல்கள் என்று கருதாமல், அஃது இனித்தோன்றப் போகும் தமிழியக்கத்திற்கு ஊதிய சங்கொலி என்றும், போர்ப்பறையென்றும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அச்சங்கொலி தமிழகத்தின் தெருக்கள்தொறும் ஊர்கள்தொறும் இனி முழங்கட்டும். இளைஞர்கள் உள்ள இடமெல்லாம் தமிழியக்கம் தொடங்கட்டும்; வினை புரியட்டும். அடுத்துவருமாண்டுகளில் இப் படிப்பட்ட முதலமைச்சர்கள் முக்காடிட்டு மூலைகளில் போய்ப் பதுங் கட்டும். இதற்குத் தமிழர்கள் முன் வருவார்களா?

— பெருஞ்சித்திரன்.

நூலகங்களுக்குத் தென்மொழி!

பொது நூலகங்களுக்குத் தென்மொழி வராத ஊர்களில் உள்ள தமிழன்பர்கள், தென்மொழியைத் தாங்கள் விரும்பிப் படிப்பதாகவும், எனவே ஆங்காங்குள்ள நூலகங்களில் தென்மொழியை வாங்கிப் பொதுமக்கள் படிக்கக் கொடுக்க வேண்டுமென்றும் நூற்றுக் கணக் காகக் கையொப்பங்கள் வாங்கி, அவ்வவ்வூர் மாவட்ட நூலகக் குழு ஆணையாளர்க்கு விண்ணப்பிக்க வேண்டிக்கொள்ளுகின்றேன். விண்ணப்பத்தின் ஒரு படியைத் தென்மொழிக்கும் விடுக்கவும். (ஆ.ர்-)

பாரதிதாசன் பாத்திறம்.

பாட்டுப் புலவன் ஒருவனின் உள்ளம் நீரின் குளிர்மையும் நெருப்பின் கனப்பும் சேர்ந்தது. தமிழ்ப் பாவலரும் அத்தன்மைக்கு விலக்கல்லர். ஆனால் வடமொழித் தொடர்பால் தமிழ் தன் இயற்கைத் தன்மை கெட்டதுபோலவே, கழகக் காலத்திற்குப் பின் பாவலர்களின் உள்ளமும் அவர்தம் இயற்கை அறிவும் சிறிது சிறிதாக ஒளி மழுங்கின. கம்பர் காலத்திற்குப் பின் தமிழ்ப் பாக்களில் வடமொழி ஆரவாரமும் வெற்றுச் சொல்லடுக்கும் தேவையற்ற அணியமைப்புகளும் மிகுந்து தமிழின் இசைத் தன்மையையே கெடுத்தன. இக்காலத்தோ அத்தன்மை மேலும் கெட்டுக் குட்டிச் சுவராய்ப் போனது. திரைப் படப் பாடல்களின் இழிதகை இசையும், தீ நாற்றக் கருத்தும், புன்மையான ஆகார ஓகாரக் கெக்கலிப்புகளும் தமிழ் மொழியையும் கெடுத்து வருவனவன்றி அம்மொழி பேசும் தமிழர்களையும் அலைக்கழித்து வருகின்றன. பாடுவதெல்லாம் பாடல் என்றும் இழுப்பதெல்லாம் இசையென்றும் எழுதுவதெல்லாம் இலக்கியமென்றும் கூறும் நுனிப்புல் மேயுந்தன்மை கற்றுப் பட்டம் பெற்றதாகத் தருக்கிவரும் ஒருசில இலக்கியப் பதர்களிடமும் பிரித்தறியாப் பிடிப்பாகி நின்றது. இத்தன்மை மேலும் மேலும் வளர்ந்து வருமாயின் தமிழ் தன் இயற்கைத் தன்மைகள் முற்றுங் கெட்டுத் தேய்ந்தழிந்து போவது திண்ணம்.

இத்தகைய தமிழ்த் தேய்வுக் காலத்தில்தான் பாரதிதாசன் என்னும் கனகசுப்புரத்தினம் பாட்டெழுதுவதில் ஒரு நல்ல எழுச்சியையும் இயற்கைத் தன்மையையும் இளைஞர்களிடை மிகுதியும் பரப்பிச் செயலிலும் காட்டினர். அவருக்கு முன் இருந்த பாரதியார் ஓர் உணர்வுப் பாவலர். அவரினும் மிகுந்த ஆற்றலுடன் பல்துறைகளிலும் தம் பாடல்களை நடையிடச் செய்தவர் பாரதிதாசன். இருப்பினும் அரசியல், குலசமய வேற்றுமைகள் பாரதிதாசனின் உண்மைத் திறனுக்குத் திரையிட்டு மறைத்தன. நடப்பு அரசியல் பற்றிய கருத்துகளை எவர்க்கும் அச்சமின்றிப் பாரதிதாசன் அவ்வப்பொழுது எடுத்துரைத்து வந்தமையால் அரசினர் அவர் பாடல்களை உளமுவந்து போற்ற முன்வரவில்லை. இக்கால் இந்தியவொற்றுமை என்ற போலிக்கொள்கைக்குத் துணையாகப் பாரதியாரின் தேசியப் பாடல்கள் அரசினரால் பெரிதும் பாராட்டவும் சீராட்டவும் பெறுகின்றன. அதன் பொருட்டுப் பாரதியாரை உலகப் பாவலன் என்று துணிந்தும் கூறுகின்றனர். ஆனால் உலகப் பாவலனுக்கு இருக்க வேண்டிய மிகு திறத்து மிகக் குன்றிய பாரதி

யாரை உலகப் பாவலன் என்று கரிசனங் கட்டிப் பேசுவதற்கு அரசியலே சாரணமன்றிப் பிறிதொரு காரணமுமில்லை. பாரதியார் விரும்பினர், சொன்னர், செய்தார் என்றெல்லாம் கூறிக்கொள்வதில் இக்கால் ஒரு புதிய மரபு தோன்றியுள்ளது. ஆனல் கால எல்லையில் இம்மரபுக்கு வலிவில்லை. ஆரியம் கொடிகட்டிப் பறந்த காலத்திலிருந்த நிலைகள் இன்று சரிந்து விழ்தல் போல், உண்மைக்கு மாருக உரைக்கப்படும் கருத்துகள் காலத்தால் அழிந்து போகும் தன்மையுடையன.

ஓர் உண்மைப் பாவலன் உளத்தாலும் நடப்பாலும் பிற மாந்தரினின்று வேறுபட்டவன். அவன் நோக்கும் நுண்ணேக்கு. நடப்பும் மெய் நடப்பு. இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றிலும் தோய்ந்தெழும் வேற்றுமையற்ற மனமொழி மெய்வினைபாடுகளின் வழி அவன் இயற்கையின் ஆற்றலுக்குக் கட்டியங்காரனுக நின்று அதனை நுகரத் தெரியாத பேதை மக்களுக்கு அறிவாசிரியனுக இருந்து ஆற்றுப்படுத்துகின்றுன். மழையில் கொட்டக் கொட்ட நனைவதிலும், வெயிலில் சருகுபோல் காய்வதிலும், பனியில் சொட்டச் சொட்டக் குளிர்வதிலும், குளிரில் வெடவெடத்து நடுங்குவதிலும் அவனுக்கிருக்கும் ஈடுபாடு பிறரால் வியந்து திகைப்படையச் செய்வது. அவன்செய்யும் செங்கோல் அரசுக்கு இயற்கையே குடிகள். இவ்வுலகத்தையே ஓரிடத்திலிருந்து கொண்டு ஆட்சி செய்யும் வல்லமையும் கற்பனையும் அவனுக்குண்டு. காழ்த்த சுடர்மணியாக ஒளிவிடும் அவன் உள்ளத்தின் முன் பிறரின் உள்ளங்களெல்லாம் கரித்துண்டங்கள் போல் இருள் அளாவிக் கிடக்கின்றன. அவன் கற்பனைத் தேர் வானில் எம்பும்; விசும்பில் உலாவும்; நீரில் நீந்தும்; மலைமுகடு, படுபள்ளம், கற்குவியல், முட்புதர் எங்கும் எவ்விடத்தும் நெளிந்தும் சுழிந்தும் படுத்தும் புரண்டும் ஓடிக்கொண்டிருக்கும் அத்தேருக்கு ஒரே பாகன் அவன். உலகை வட்டமிட்டுக் கொண்டிருக்கும் கற்பனைத் தேனீயான பாவலன் இவ்வுலக மக்களை உய்விக்க வந்த இறைவனின் பன்னன் (தூதுவன்). அவன் உள்ள விசும்பில் வலம் வராத எண்ண உடுக்களே இல்லை. மறைந்து தோன்றாத மின்னல் நயங்களே இல்லை; குமுறி அதிராத உணர்விடிகளே இல்லை; பொங்கி அடங்காத எழுச்சியலைகளே இல்லை. மொத்தத்தில் முற்றும் விளங்காத இயற்கைப் புதிருக்கு அவன் ஓர் எடுத்துக்காட்டு. முன்னறிவிக்கப்படாத எத்தனையோ ஊற்றுக் கால்கள், அவன் உள்ளத்தே அவ்வக்கால் சுழித்துப் பொங்குகின்றன.

அவை யத்தனையும் இவ்வுலக மக்களுக்கு ஒன்றுவிடாமல் பயன்படு மாறுல், ஆ! இவ்வுலகமே துறக்க வின்பத்தைக் கரவாது நல்குவ தாகும்.

பாவலன் ஒருவனுக்கு இருக்கின்ற தன்மைகள் எல்லாம் இயற்கை யாக முழுமையாக இருத்தல் வேண்டும். ஓரிறக்கை உள்ள பறவை யையோ, தும்பியற்ற தேனீயையோ இவ்வுலகம் படைப்பதில்லை. எனவே பாவலனும் அரைகுறையாகப் படைக்கப் படுவதில்லை. வித்து விழுந்த இடப் பிசகால் மரம் கூனியும் குறுகியும் போகுமேயன்றி இயற்கைத் தோற்ற ஒழுங்கில் ஓர் இம்மியும் குறைய ஒரு பாவலன் தோன்றுவதிலன்.

அத்தகைய இயற்கைப் பாவலன் ஒருவனுக்கு இருக்கும் திறங்கள் பல. அவற்றுள் இன்றியமையாதன நுண்ணேக்கு, கற்பனைத்திறன், பாட்டுணர்வு, இயற்கையீடுபாடு, உலகியலறிவு, மனவியல் மாந்தவிய லறிவு, மொழியறிவு, சொல்லாட்சி வன்மை முதலியன. இவற்றில் நுண் ணேக்கு வழி கற்பனைத்திறனும், அதன் வழி பாட்டுணர்வும், அதன் வழி இயற்கையீடுபாடும், அதன் வழி உலகியலறிவும், அதன் வழி மனவியல் மாந்த வியலறிவும், இவற்றின் வழியாய இலக்கிய இலக் கணப் பயிற்சியால் மொழியறிவும், அதன் வழி சொல்லாட்சியும் படிப் படியாய் மலர்ந்து மணம் பரப்பு வனவாம். இவற்றில் ஒன்று குறை யினும் அவன் நிறை புலவன் ஆகான். பெரும்பாலான பாவலர்கள் இவற்றுள் ஓரிரண்டு தன்மைகளே மிகப் பெற்றவர்கள் ஆவார்கள். தொல்காப்பியர், கபிலர், பரணர், வள்ளுவர், இளங்கோ வடிகள் முதலிய ஒரு சிலரே முற்றும் பெற்ற முழுமைப் புலவராவர். இக் காலத்து இவற்றுள் ஓரிரண்டின் சாயல்கள் பெற்றவராலுைம் தாமே முழுப்புலவர் என்று தருக்குவாரைப் பற்றி என்ன நினைப்பது?

நம் நினைவுக்குக் காரணமாகிய பாவேந்தர் பாரதிதாசன் ஓர் இயற்கைப் பாவலனுக்குரிய தன்மைகளில் ஓரளவு நிறைவு பெற்றவர் ஆவார். போலியும் புன்மையும் நிறைந்த இற்றைத் தமிழகச் சூழலுக்கு அவர் போன்ற புலவர் தெள்ளக் கிடக்கும் திரள் மணி போன்றவர் ஆவர். அவர்தம் பாடல்களில் மேற்கண்ட தன்மைகள் எவ்வாறு ஒளிபெற்று விளங்குகின்றன என்று பார்ப்பதே இக்கட்டுரை யின் நோக்கம். இவ்வடிப்படையில் அவர் எழுதிய பாடல்கள் எல்லா வற்றையும் பின்னர் ஆய்ந்து திறனாய்வு செய்ய விருப்பதால் இக்கால் ஓரளவே நான் கொண்ட எண்ணப் பரப்பைக்காட்ட முடிந்தது.

பாவல்லானுக்கிருக்க வேண்டியவற்றுள் தலையாயது நுண்ணோக்கு. பிறரெல்லாருக்கும் மரமாகவும் மட்டையாகவும் படும் உலகப் பொருள்கள் யாவும் அவனுக்கு உயிருள்ள உருவங்கள் போலவே படும். அவை யாவும் அவனிடத்துத் தடையின்றிப் பேசும்; தம் இன்ப துன்பங்களை இவனிடத்து எடுத்துரைக்கும். நம் பாரதிதாசன் கண்களும் அப்படிப்பட்டவை. இத்தன்மை வள்ளுவரால் கண்ணோட்டம் என்று சிறப்பித்துக் கூறப் பெறும். கண்ணுக் கணிகலன் கண்ணோட்டம் என்று அவர் கூறுவார். கண்ணோட்ட மற்ற கண் கண்ணாகாது; வெறும் புண்ணே என்பதவர் கருத்து. உலகியலறிவே கண்ணோட்டத்தால் ஏற்படுவது என்று அவர் உரைக்கின்றார். 'பண்ணென்னும் பாடற்கு இயைபுள்ளது கண்' என்பர் வள்ளுவர். அத்திறன் இல்லாத கண் என்ன கண் என்று அவர் வினவி இகழ்கின்றார். கண்ணோட்டமில்லாதவர் மரத்திற்குச் சமமானவரென்று அவர் இழித்துரைப்பர். கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கே இவ்வுலகம் உரிமை உடையது என்று குறள் இலக்கணம் கூறுகின்றது. இத்தன்மை அரசனுக்கு மிக இன்றியமையாது கூறப் பெற்றது. பாவலன் ஒருவனும் இயற்கைக்கு அரசனாதலின் அவனுக்கும் கண்ணோட்டம் இன்றியமையாதது. கண்ணோட்டம் நுண்ணோக்கு என்பன கூர்ந்து நோக்குதல்; பொருளின் உளவாகிய உண்மைத் தன்மைகளைக் கண்வழி உணர்வால் உற்றறிதல் என்று பொருள்படும்.

உலகப் பொருள்கள் யாவற்றிலும் பாவலன் ஒருவனுக்கு ஈடுபாடு இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பொருளையும் கூர்ந்து நோக்கும் பழக்கம் அவனுக்கு இயற்கையாகவே அமைந்து கிடக்கும். ஒரு சிறு குழந்தையைப் பிறர் காணும் நோக்கு வேறு, பாவலன் காணும் நோக்கும் வேறு. பாவேந்தர் பாரதிதாசன் நோக்கில் ஒரு குழந்தை எப்படித் திகழ்கின்றது என்பதைக் கீழுள்ள பாடல் கூறும்.

இளகிய பொன் உருக்கின்
சிற்றுடல்! இருநீ லக்கண்!
ஒளிபடும் பவழச் செவ்வாய்!
ஒருபிடிக் கரும்பின் கைகால்!
அளிதமிழ் உயிர்பெற் றங்கே
அழகொடும் அசையும் பச்சைக்கிளி!

இப்பாடலில் அவர்கண்ட குழந்தையின் ஓவியம் சொல் வண்ணத்தால் வரையப் பெற்று, உணர்வூட்டத்தால் உயிர்பெற்றுத் தவழ்கின்றது. இதன் சிரிப்பு பாவலரின் உள்ளத்தைக் கிளுகிளுக்கச் செய்கின்றது. அவர் கண்களால் மொண்டு உணர்வால் பருகிய அழகை உலகத்தவர்க்கு உலுக்கிக் காட்டுகின்றார்.

மெல்லென அதிர்ந்த மின்னல் அந்த
செல்வக் குழந்தையின் சிரிப்பு !
குளிர்வாழைப்பூக் கொப்பூழ் போன்ற
ஒளியிமை விலக்கி வெளிப்படும் கண்ணால்
முதுவையத்தின் புதுமை கண்டதோ ?
தங்க மாதுளைச் செங்கனி பிளந்த
மாணிக்கம் அந்த மதலையின் சிரிப்பு !

— என்று செம்பவழத்துச் சிமிழ் சாய்ந்த அமுதாய்ச் சிரித்த அந்தக் குழந்தைச் சிரிப்புக்கு உளம்பறிகொடுத்து நிற்கின்றார் பாவேந்தர். அக்குழந்தைக்குப் பாலூட்டுகின்ற தாய், அதற்குச் செய்யும் பணிக்கையான அன்புத் தொண்டால் பூரிக்கின்றது அவர் உள்ளம். தாயாக மாறித் தானும் அக்குழந்தையோடு தோய்கின்றார். அவர் நோக்கிய நோக்கைக் கவனியுங்கள் :

படுக்கையின் விரிப்பு மாற்றிப்
பக்கத்தில் குழந்தைக் காண
துடைக்கின்ற துணிகள் தேடித்
தூயபல் விரிப்பும் தேடி
விடிவிளக்கும் திருத்தி
விலாப் புறத்திற் குழந்தை
குடித்தபால் எடுத்தல் கண்டு
குட்டையால் தூய்மை செய்தே
உடலினை ஒருக்கணித்தே
குழந்தையை மார்போ டொட்டித்
தடமலர் வலக்கை தன்னைத்
தலைக்கணை மீது வைத்தும்
இடதுகை குழந்தை மேலே
வில்லைப்போல் வளைய இட்டும்
கடுகள வசைதல் இன்றிக்
கண்வளர் கின்றாள் அன்னை !

எல்லாருந்தாம் குழந்தையையும் அதைப் பேணும் தாயினையும் அன்ருடம் பார்க்கின்ருேம். அவ்விரண்டுடல் ஒருயிரின் உண்மை யீடு பாட்டினை நம்மில் எத்தனைப்பேர் இவ்வாறு நோக்கிச் சுவைத்திருக்க முடியும்? குழந்தையின் உடல் நெளிவிலும், விழி அசைவிலும், அவற்றின் மேற்புரளும் தாயன்பிலும் தாய்க்குந் தாயாக நின்று கூர்ந்து நோக்கும் அவர் உள்ளந்தான் என்னே! அக்குழந்தையை எல்லாரும் எளிதில் எடுத்து அணைத்தல் இயலாது என்னும் உண்மையையும் பாவலர் அறிந்துள்ளார். மட்கலம் வனைவோன் பசுமட் கலத்தைத் தூக்குதல் போல அதனைத் தூக்கவேண்டுமாம். அஃது அக்குழந்தையைப் பெற்ற அன்னைக்குத்தான் தெரியுமாம். புலவர் கூறுகின்ருர் கேளுங்கள் :

ஆழியில் உருவான அழகுமட் கலத்தை
இயற்றி யோர்க்கே எடுப்பது முடியும்!
குளநீர்த் தாமரை குழந்தையின் இளந்தலை!
அம்மலர்த் தண்டே அழகிய மெல்லுடல்!
தண்டுடல் மலர்த்தலை தாங்குமா? — என்று

நம்மை வினவுகின்ருர். தாமரை மலர் போன்ற தலையையுடைய இக்குழந்தையின் உடல் அக்கொடிபோல் மென்மையானது. அம்மலரை அக்கொடி தாங்காதது போல இக்குழந்தையின் தலையையும் உடல் தாங்காது. அதனுல் அதனை,

'உலையமிழ்தை வறியவள் ஒருத்தி தூக்கல்போல்
தவருது தூக்குதல்' வேண்டுமாம்.

பெற்ற தாய்க்கும் தெரியாத பேருண்மை நம் பாவலர்க்கு எப்படித் தெரிய வந்தது? இனி அந்தக் குழந்தை வளர்ந்து ஓராண்டு அடைவதைத் தன் கூரிய விழியால் விடாமல் கவனித்து உணர்ந்ததை உணர்த்துகின்ருர் பாவேந்தர். பாட்டைப் பாருங்கள்.

வான்பார்த்துக் கிடந்த மேனி
மண்பார்த்துக் கவிழ்ந்தும் பின்னர்த்
தேன்பார்த்த மலர்க்கை யூன்றிச்
செம்மையாய்த் தவழ்ந்து நின்றும்
தான்பார்க்க அங்கு மிங்கும்
தள்ளாடி நடந்தும் கெண்டை
மீன் பார்த்த கண்ணுள். பெண்ணுள்
ஓராண்டு மேவல் உற்ருள் — என்கின்ருர்.

'மோப்பதும் பார்ப்பதும் முடுகலும் குட்டியைக்
காப்பதற் கென்னும் கருவரிப் பூனை'

போன்ற சிற்றுயிர்களையும் அப்படித்தான் பார்த்து மனமகிழ்ந்திருக்கின்றார். கோவைப் பழத்தைக் கொத்திச் செல்லும் கிளியும் அவர் நுண்ணிய நோக்குக்குத் தப்பவில்லை. சிவந்த கோவைப்பழத்தைச் செஞ்சுடர்க் கொழுந்துக் கிணை வைத்துப் பார்க்கின்றது அவருள்ளம். அதைக் கொத்த வரும் கிளியின் சிவந்த மூக்கும் ஒரு சுடர் விளக்கே. அக்கிளி கோவைப்பழத்தைக் கடித்துத் தின்று செல்வது, விளக்கு ஒன்றின் சுடரிலிருந்து இன்னொரு விளக்கைக் கொளுத்திக்கொண்டு போவது போல் உள்ளதாம் பாவலர்க்கு.

'பளிச்சென்று எரியும் கோவைப்
பழத்தினில் மூக்கை ஊன்றி
விளக்கினில் விளக்கை ஏற்றிச்
செல்லல் போல் சென்றாய்! — என்கின்றார்.

பிறர்க்கு எளிதாகப் படுகின்ற எளிய, பாச்சுவையற்ற வினைப்பாடுகளும் பாட்டுள்ளத்திற்கு இன்பம் விளைவிக்கக் கூடியன. அதற்குதவுவது பாவலரின் கூர்ந்த நோக்கே. வடை சுட்டு விலை போக்கும் ஏழைப் பெண்ணொருத்தி அவருக்கு ஓவியப் பெண்ணாகப் படுகின்றாள். அவள் மாப்பிசைவதையும், ஒரு கையைக் கீழ் வைத்து ஒரு கையை மேல் வைத்து மாப்பிசைவதையும், அதை நெய்யிலிடுவதையும், அவ்வடை 'ஒய்' என்ற ஓசையுடன் வேகுவதையும் எத்துணை அளவு உற்று நோக்கியுள்ளார் பாருங்கள்.

'வெண்ணெயில் மாப்பிசைந்து விரிந்த உள்ளங்கை
ஒன்று கீழுற மற்றொன்று மேலுற
மாற்றி மாற்றி வடைதட்டி இட்டும்
ஊற்றிய நெய்யில் 'ஒய்'யென வேகுவதில்
இட்டவிழி எடாமலும் இருக்கும் ஓவியப்
பெண்' — என்று அவர் காட்டும்

நுண்ணிய காட்சியின் சுழிவு நெளிவுகளைப் பார்த்தீர்களா? எல்லாருந்தாம் மளிகைக் கடைக்குச் செல்கின்றனர். எத்தனைப் பெயர் உள்ளம் அங்கு நிகழும் காட்சிகளில் ஈடுபட்டு மேய்கின்றது. பாவேந்தர் உள்ளம் மேய்ந்த அழகைப் பாருங்கள்.

மல்லியை அளப்பார்; கொம்பு
மஞ்சளை நிறுப்பார்; நெய்க்குச்

சொல்லிய விலை குறைக்கச்
சொல்லுவார்; கொள் சரக்கின்
நல்லியல் தொகை கொடுப்பார்.
சாதிக்காய் நறுக்கச் சொல்வார்.
வெல்லம் என்ருெரு குழந்தை
விரல் நீட்டும் கடை' – என்று

அவர் ஈடுபட்ட வகையை எப்படித்தான் வியப்பது? அவர் எழுதிய அழியா இலக்கியமான குடும்ப விளக்கில் மாமன் மாமி கொணர்ந்த முப்பத்தெட்டுப் பொருள்களையும் தலைவி எடுத்து வைக்கையில் அவற்றைப் பாவேந்தர் அடுக்கு முறையாகச் சொல்வது, அவர் நுண்ணோக்கிற்குச் சீரிய எடுத்துக்காட்டாகும். நுண்ணோக்கில்லாத பாவலனின் பாடல்கள் வழுக்கைக் கறகள்; கூர்மையில்லாத வாள்; மொட்டைமரம்; கொம்பில்லாத எருது; முனை முறிந்த தூவல் போன்றவை. பாவலன் ஒருவனுக்குள்ள அறிவுக்கூர்மை அவன் நோக்கி நுனித்தறிந்து உரைக்கின்ற சொற்களிலும் கருத்துகளிலும் குமிழியிடும்; அவன் கண்கள் வழிக் கண்டுரைக்கின்ற உண்மைகள் நம் கருத்தைக் கட்டியிழுக்கும் தன்மை வாய்ந்தவை. பாரதிதாசனின் நுண்ணிய நோக்கிற்குச் சான்ருக ஈண்டெடுத்துக் காட்டப்பெற்றவை ஒரு சிலவே! அவர்தம் பாடல்களை நுணுகிப் பார்ப்பார் அவரின் கண்ணோட்டத்தைக் கண்டு வியப்படைவர். பாட்டெழுதப் பயில்கின்ற இளம் பாவலர்க்கு அவரின் நுண்ணோக்குப் பாடல்கள் கலங்கரை விளக்கமாக நின்று வழி காட்டுந் திறத்தன.

இனி, அவர்தம் கற்பனைத் திறனைப்பற்றி ஒரு சிறிது காண்போம். கண்ணோட்டம் மிகமிகவே ஒருவர்க்குக் கற்பனையாற்றல் பெருகுகின்றது. ஆற்றின் புதுவெள்ளமென நுங்கும் நுரையுமாய்ச் சிலிர்த்துப் பொங்குகின்றது. விரிந்து சிறகார்ந்து எம்பிப் பாயும் கற்பனைத்திறன் ஒருவர்க்கு இருக்கவில்லையாளுல் அவர் பாடல் மாளிகையின் படிக்கட்டில் கூட கால் வைத்தல் இயலாது. தன்னை மறந்து மெய்சிலிர்க்க வைக்கும் பாட்டுக் குன்றத்தின் கொடுமுடியை அண்ணுந்து கூட பார்த்தல் முடியாது. கற்பனையே சொற்களுக்கு வண்ணங்களைப் பூசுகின்றது. நுண்ணோக்கு என்பது ஓர் ஓவியத்தை வரையத் தொடங்குமுன் ஓவியன் ஒருவன் வரைந்து கொள்ளும் கரட்டு வரையைப் போன்றதெனின், கற்பனை அக்கரட்டு வரையை நிரப்ப வந்த தூரிகையின் ஒளிவண்ணம் போன்றது. நோக்கிய

நோக்கில் தென்படுகின்ற காட்சியை ஒரு பாவலன் மன உகிரால் கிள்ளியெடுத்துக் காட்டுகின்ற வல்லமை கற்பனை என்ற சாணைக் கல்லில் பிடித்துக் கூர்மையாக்கப் பெறுதல் வேண்டும்.

மருத்துவரும் பாவேந்தரும்.

பாவேந்தர் பாரதிதாசன் ஒருமுறை நோயுற்று உடல் நலிவாக இருந்தார். அவர் பால் அன்பும் பரிவும் கொண்ட மருத்துவர் ஒருவர் அவர் உடலை மிகவும் கவனமாகப் பார்த்து வந்தார். நோய்க் கிடையிலும் பாவேந்தர் அடிக்கடி பாடல்களை எழுதிக் கொண்டும் வந்து போகின்ற அன்பர்களிடம் ஈடுபட்டுக்கொண்டும், இருந்தார். அப்பொழுதெல்லாம் அடிக்கடி வெண் சுருட்டுப் புகைத்துக் கொண்டிருப்பார் பாவேந்தர். இதைக் கூர்ந்து கவனித்த மருத்துவர் அவரிடம் மிகவும் அன்பாக, "புகை பிடிப்பதை நிறுத்தி விடுங்கள்; உங்கள் உடல் மிகவும் நலிவுற்றிருக்கின்றது" என்றார். அதற்கவர் தமக்கே உள்ள பெருமிதத்துடனும் நகைச் சுவையுடனும்" உம்... இதைத்தவிர வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்; அதுதான் எழுதுகிறது..." என்று தம் கையிலுள்ள வெண்சுருட்டைச் சுட்டிக் காட்டிய படியே சொன்னார். மருத்துவர் வியந்து போனார். இதைத் திருக்குறள் பெருமாள் சொன்னார்.

பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் கற்பனை சிலுசிலிர்த்தோடும் அருவியின் குளிர் நீர் போல் வழிந்து கொண்டிருப்பதை எல்லாரும் கண்டு மகிழலாம். வெள்ளையும் கறுப்புமாகப் பிறர் பார்க்கின்ற காட்சிகளைப் பாவேந்தர் வண்ணமும் ஒளியும் மண்டிக்கிடக்கும் எழிலோவியமாகப் பார்த்து உரைக்கின்ற திறன் நம் மயிர்க்கால்களைக் குத்திட வைக்கின்றது. இருக்கின்ற இடத்திலிருந்துகொண்டே விசும்பளாவிப் பறக்கும் அவர்தம் மனச்சிட்டு இசைக்கும் தமிழிசையமைப்பில் மயங்காதவர் ஒருவருமிரார்.

கற்பனையாற்றல் வல்ல புலவனுக்குத் தட்டி நடக்கின்ற கால்கள் தாண்டிப் பறக்கின்ற குதிரையின் கால்களைப் போல் ஆற்றல் பெற்றிருக்கும்; மெதுவாக அசைகின்ற கைகள் விசும்பேறித் தாவும் வல்லமையைப் பெற்றிருக்கும்; அவன் அமர்ந்திருக்கும் தரை வானத்தின் கொடுமுடி; அவன் பார்க்கின்ற பார்வை, பல்லாயிரக் கணக்கான கோளங்களையும் உடுக்களையும் ஊடுருவிப் போகும் பேராற்றல் சான்றது. அவன் மூடிய வாயிதழ்கள் மூடாத கடல் வாய்! விடுகின்ற மூச்சு விரைந்தடிக்கும் கடற்காற்று! குறுமணலுக்கும் குன்றுக்

கும் அவனிடத்தில் பொருளில்லை; கடலிலும் கையளவுள்ள குழி நீரிலும் அவன் கற்பனைக் கப்பல் விரைந்து பாயும் திறன் சான்றது. அவன் மனைவி மக்களுக்கு வேற்றுமை காண்பதில்லை; கழுதைக்கும் குதிரைக்கும் ஒரே அழகை அவன் கற்பனைக் கண் படைத்துக்கொள்ள முடியும்; நெளிந்து செல்லும் புழுவின் அசைவும் நீட்டியிருக்கும் ஒட்டைச்சிவிங்கியின் கழுத்தசைவும் பாவலனின் கற்பனை அரங்கத்தில் ஒரே காட்சியைத்தான் நடித்துக் காட்டும். தண்ணீரைக் குடித்துப் பாலை விழுங்கும் தன்மையுடையது அவன் வாய்! புல்லைக் கிள்ளிப் பூவாக நுகர்வது அவன் மூக்கு! வேப்பங்காய் இனிப்பதும், கண்டு கசப்பதும் அவன் உள்ளத்தில் நிகழும் அரிய வேதியல் மாற்றம்! பாடல்களை எழுதிக்கொண்டிருக்கும் அவன் கைகள் வானில் வட்டமிடும் மணிச்சிட்டினும் விரைவுடையன. மல நாற்றமும் மலர் நாற்றமும் கலந்தளாவிக் குடிக்கின்ற அவன் கற்பனை உள்ளத்தில் இழிவுக்கும் சிறப்புக்கும் வேறுபாடிருப்பதில்லை, மயிலை அவன் மாடப்புறுவாக மாற்றுவான்; கூகைக்குக் குயிலின் குரலை அவன் ஏற்றுவான்; காகத்

நினைவாக வைத்துக் கொள்ளுவேன்......!

1955 என்று நினைக்கின்றேன். அந்த ஆண்டு வந்த பொங்கல் நாளில் என் பெரிய மகள் பொற்கொடியுடன் நான் பாவேந்தரைப் பார்க்கச் சென்றேன். கையில் சிலவகைப் பழங்களும் ஒரு (Swan) தூவலும் அவருக்கு அன்பளிப்பாகக் கொண்டு சென்றிருந்தேன். பழங்களையும் அந்தத் தூவலையும் ஒரு தட்டில் வைத்து என் குழந்தையின் கைகளால் அவற்றை அவரிடம் கொடுத்து, "ஐயா, இந்தத் தூவலை என்றென்றைக்கும் என்னுடைய நினைவாக நீங்களே வைத்துக் கொள்ள வேண்டும். எவருக்கும்கொடுக்கக்கூடாது" என்று வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர், "ஊகும்... நான் யாருக்கும் தரவே மாட்டேன்...உன் நினைவாகவே வைத்துக் கொள்ளுவேன்..." என்று கூறினார். அதன்பின் ஓரிரு கிழமைகள் கழித்து அவரிடம் அந்தத் தூவல் இல்லாதைக்கண்டு, "ஐயா, 'அந்தத் தூவல் எங்கே?" என்று கேட்டேன். அதற்குப் பாவேந்தர் தமக்கே யுரிய குழைவுடன், "அதை எவனோ வாங்கிக் கொண்டு போனான்'பா; எவன் வாங்கிப் போனான் என்பதே நினைவில் இல்லை... என்ன செய்ய..." என்று குழந்தை போல விடை சொன்னார். பொருள்களில் என்றுமே அவர் நாட்டம் வைத்ததில்லை, என்பதற்கு இஃதோர் எடுத்துக் காட்டு!

(—ஆ–ர்)

திற்கு வண்ணச் சட்டையிட்டுப் பார்க்கும் அவன் கண்கள்! குருவித் தலைமேல் குன்றைத் தூக்கி நிறுத்தும் அவன் கற்பனையின் எல்லை இப்புடவியின் எல்லையையும் தாண்டிக் குதிக்கும் ஆற்றல் சான்றது. கற்பனை பெருகப் பெருகத்தான் பாவலன் ஒருவனின் பாடலில் உள்ள எழுத்துகளும் பேசும்! எழுத்தின் கோடுகளும் ஆடும்! இத்தகைய பேராற்றல் பெருங்கற்பனை பாவலனுக்கு இறைவன் கொடுத்த வரையில் கொடை! அருள் ஈகை! இவ்வுலகத்து மக்களின் நெஞ்சங்களை அரங்காக்கிக் கொள்ள இறைவன் கற்பனை மிகுந்த பாவலனை முகப்புப் படமாக நிறுத்திக் காட்டியுள்ளான். அவன் உள்ளத்தில் இருந்து கொண்டு இறைவன் போகு வாகற்ற இந்த மக்கள் கூட்டத்திற்கு நல்லுணர்வேற்றுகின்றான். கற்பனை பாவலனுக்குக் கிடைத்த உரிமைச் சீட்டு! இந்த உலகத்தின் எந்த மூலைக்கும் எம்பிப் பாயப் பயன்படும் பயணச் சீட்டு! இதுவன்றி எந்தப் பாவலனும் எந்த ஒரு சிறு எறும்புப் புற்றைக் கூட அணுக முடியாது.

பாரதிதாசனுக்கிருந்த கற்பனைச் சிறகின் பரப்பை இனிப் பார்ப்போம். தன் மனத்துக் கியைந்த பெண்ணொருத்தி தன்னைத் தனியே தவிக்க விட்டு விட்டு அயலூர் போகின்றாள்! அவள் போவது வண்டியில்! அவ்வண்டி அச்சு முறிந்து போக வழியில்லை; அந்த வண்டியை இழுத்துச் செல்லும் காளைகளின் கழுத்து முறிந்து போகவும் இடமில்லை. ஏனெனில் அவ்வண்டியில் செல்வது வெறும் பூக்காடுதானாம்! பாவலரின் கற்பனை பூசிய மனத்தின் ஒளிப்படச் சுருளில் அக்கன்னி விழுந்த படம் அப்படி! படத்தைப் பிடித்து மருந்துக்கலவை நீரில் கழுவி எடுத்த பின் பாவலர் அதை உற்றுப் பார்க்கின்றார். கன்னியைத் தான் படம் பிடித்தார். ஆனால் ஒளிப்படத்தில் விழுந்திருப்பது கன்னியின் உருவமன்று. ஒரு பூக்காட்டின் உருவம், செவ்வந்தியும் தாமரையும், காந்தளும் முல்லையும் மலர்ந்து குலுங்கும் பூக்காடு பாவலர்க்கும் வியப்பு! பாவலர் கைகளில் நின்றாடும் இளைஞனுக்கும் வியப்பு! இவ்விருவரின் கற்பனைச் சிறகுகளுடன் மிதந்த நமக்கும் சொல்லவொண்ணா வியப்பு! பாடலைப் பாருங்கள்.

தலைக்குழல் மேற்செவ் வந்தி!
தாமரை முகமும் வாயும்
மலைக்கின்ற மூக்கெள் ளின்பூ!
வாய்த்தசெங் காந்தள் அங்கை.

குலுக்கென இடைகு லுங்கச்
சிரித்தென்னைக் கொல்லும் முல்லை!
மலர்க்காட்டை ஏற்றிச் சென்ற
வண்டியை மறந்தேனில்லை.

எப்படி? வண்டியில் போன மலர்க்காடு! பாவலனின் மனத்திரையில் எறும்பின்மேல் யானை யேறும்! தும்பிமேற் கழுகு குந்தும்! மீனின் முதுகில் கப்பல் நங்கூரம் பாய்ச்சும்! அரிமா மழைமுகிலின் கரும்புழை யுள் புகுந்து தூங்கும்! இவையெல்லாம் பாவலன் காட்டும் கண்கட்டு மோடிச் செயல்கள்!

அவருக்கு ஏற்படும் ஐயங்களுக்கு விடை கூற அளிய வினைப் பாட்டின் எளிய மாந்தர்க்கு இயல்வதில்லை. மழைத்துளி மாந்திப் பாட் டிசைக்கும் வானம்பாடியின் மெல்லிசை பாவலர்க்கு மிகுந்த ஐயத்தைக் கிளப்பிற்று. அவர் கண்கள் அகல விரிகின்றன! வாய் அங்காந்து நிற்கின்றது! அண்ணுந்த முகம் சுருங்கிச் சுருங்கி விரிவடைகின்றது; தாமரை கூம்பி மலர்வதைப் போல்! நம்மைப் பார்த்து அவர் வினவு கின்ற கேள்வி நம் வாய்களை அடைக்கின்றது. அவர் கேள்வியைக் கேளுங்கள்.

வானந்தான் பாடிற்ரு ? வானிலவு பாடிற்ரு ?
தேனை யருந்திச் சிறுதும்பி மேலேறி
நல்லிசை நல்கிற்ரு ? நடுங்கும் இடிக்குரலும்
மெல்லிசை பயின்று மிக இனிமை தந்ததுவோ ?

கற்பனைத் தேனுண்ட புதுவைத் தும்பி கேட்பதைப் பார்த்தீர்களா? அவர் செவியில் வானம்பாடி பாடும் பாட்டாகப் படவில்லை அது! வானம் பாடும் பாட்டாகவே படுகின்றது! நமக்கெல்லாம் வானம்பாடி யும் தெரிவதில்லை; அதன் பாட்டும் கேட்பதில்லை. ஆனுல் பாவலர்க்குத் துல்லிச் சிறு பறவை பாடும் பாட்டு வானம் பாடும் பாட்டாகவும், வானிலவு பாடும் பாட்டாகவும் படுகின்றது? தேனையருந்திக் களிப்பால் உயர்ந்து பறக்கின்றது ஒரு தும்பி! மேலே, மேலே, மிக மேலே ஏறி வானில் வட்ட மிடுகின்றது அந்த வாழைப் பூவின் கொப்பூழ் போன்ற சிற்றுடல் தும்பி! ஒருவேளை அது தான் உண்ட தேனின் மயக்கத்தால் உடல் விம்மிப் பருத்து வானம்பாடி யளவாக வளர்ந்து பாடுகின்றதோ? என்று பாவலர் நம்மைப் பார்த்துக் கேட்கின்ருர். நமக்கு விடை தெரிந்தால் தானே! கேட்ட கேள்விக்கு விடை சொல்லத் தெரியாது

குழம்பிக் கொண்டிருக்கும் நம்மைப் பார்த்து மேலும் மேலும் கேட்டுக் கொண்டே போகின்றது பாவலரின் விசையுள்ளம். இடித்துக் கொண்டுள்ள இடி, நாமெல்லாம் வியக்குமாறு தன் பெருங்குரலைச் சிறிதாக்கி, வானவில்லை யாழாக்கி இசைப் பயிற்சி பெற்று பாகு போன்ற இனிமையாக இழையோடும் குரலில் தான் கற்ற பண் வரிசைகளை நாம் கேட்கும் படி இசைத்துக் காட்டி அரங்கேற்றம் நடத்துகின்றதோ? எப்படி! பாவலர் இடியைப் பிசைந்துருட்டி இசை யாக்கிப் பார்த்துள்ள கற்பனைக் கண்ணாடியைப் பார்த்தீர்களா? அடங்கா வேட்கையொடு அங்காந்து திரியும் அவர் பாட்டுள்ளம் நமக்குப் புரியாத புதிர். இயற்கை வடித்த எழில் உருவங்களைச் சுவைக்கத் தெரியாத நம் முன், அது பாவலர்களை இம்மண்ணுலகுக்கு அனுப்பித் தன் ஆற்றல் மாற்றல்களையும், குழைத்து வீசிய வண்ணச் சிதறல்களையும் கற்பித்து நம்மை அதன் முன் மண்டியிட வைக்கும் பேராற்றலைப் பார்த்தீர்களா?

பாட்டுப் புலவன் ஊமையான இயற்கைப் பெண்ணிற்கு வாயாக இருந்து களிப்பூட்டும் வகைதான் என்னே! இறைவனின் கைவண்ணங்களை மை வண்ணமாக எடுத்தெழுத அமர்த்திக் கொண்ட பெருங் கணக்கன் பாவலன். இயற்கையை ஆளும் தலைமை யதிகாரிக்குப் பாவலன் சுருக்கெழுத்தாளன்! அவன் கிறுக்கிய சுருக்கெழுத்துகளை விரித் தெழுதும் நம்மனோர் தாவலும் துவளும்; தாளும் சுருங்கும்!

—தொடரும்.

தமிழக விடுதலை இயக்கம்

'தமிழக விடுதலை இயக்கம்' ஒன்றை விரைவில் தொடங்குவதாக நாம் முன்பே அறிவித்தது தென்மொழி அன்பர்களுக்கு நினைவிருக்கலாம். அவ்வாறு தோற்ற விருக்கும் அவ்வியக்கத்தின், அமைப்பு மிகவும் கட்டுப்பாடாகவும், செப்பமாகவும் இருத்தல் இன்றியமையாதது. இனி, இயக்க அமைப்பை விட அதில் உறுப்பினராக இருக்க வேண்டியவர்கள் மிகவும் செப்பமும், உறுதியும், வினையாண்மையும் கொண்டு, எத்தகைய முடிவுக்கும் கட்டுப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டு மன்றோ? எனவே தோற்றப் பெறும் அவ் விடுதலை இயக்கத்தில் உறுப்பினராக விரும்புவார் தம்தம் கல்வி, தொழில், குடும்பச் சூழல், அகவை, ஈடுபாட்டு அளவு முதலியனவற்றைத் தெளிவாக, பெருஞ்சித்திரன், தென்மொழி கடலூர்—1. என்ற முகவரிக்கு மூடப்பெற்ற பதிவஞ்சலில் விடுக்க வேண்டுகின்றேன். பிற விளக்கங்கள் அவ்வப் பொழுது தென்மொழியில் வரும்.

—பெருஞ்சித்திரன்.

துரை - மாணிக்கம்

(3)

அத்தையின் அன்பை ஐயை எண்ணினாள்!
தித்தித்த துள்ளம்! திரும்பினாள்; புரண்டாள்!
அத்தான் நினைவு மீண்டும் அண்டிட
புத்துணர் வுற்றாள்; பொங்கிட உயிர்த்தாள்!
முன்னே உள்ள முப்பது நாட்களும்
என்னே கழியும் எனநினைந் தயர்ந்தாள்!
"கழிந்த நாளெலாம் கண்ணீர் நாட்களே!
ஒழியா நீள்நொடி ஒன்றொன் றொன்றென
ஏகிய பின்றை இருபொழு தொழிந்து
போகா நாட்கள் முப்பதும் போகுமுன்
சாகா திருப்பினென் சாகா மருந்தை
ஆகங் குளிரக் கண்களால் அருந்துவேன்!"
என்று நினைத்தாள்; இருவிழி நனைந்தது!

"என்று திருமுகம் எதிர்ப்படும்? இருவரும்
மன்றலிற் குந்தும் மணிநாள் என்றோ?
என்றனை அவருக் கீயுநாள் என்றோ?
கலையகத் தருந்திய கல்வி முற்றும்
அலைமிகும் உளத்தோ டவரொடு பகிரும்
திருநாள் வருமோ? என்துயர் தீருமோ?
ஒருநா ளாகிலும் உயர்ந்த தோளையும்
அழகு முகத்தையும் அள்ளும் விழியையும்

பழகு நெஞ்சையும் பார்த்துக் கொண்டே
பொழுதைக் கழிப்பனோ ? பொலபொல வென்று
பழுதறும் அன்புரை பகரு வேனோ ?
இருகைப் பயன்பெற வெண்சோ றிட்டே
ஒருகை வழிந்திட ஆநெய் ஊற்றி
அளாவி அவர்வாய்க் கன்பொடும் அருத்திக்
கனவின் நினைந்ததை நனவிற் காண்பனோ ?
தெய்வமே அவருடல் தீதுரு திருக்க
மெய்யடி யாளை அவருடன் பொருத்துக!"
எனப்பல எண்ணி ஏங்கினாள் ஐயை!
நினைவால் நெஞ்சம் நிறைந்து சோர்ந்தபின்
ஐயை உறங்கினள்; கனவொன் றலர்ந்தது!

வெய்ய கனவில் செம்மலும் வந்தான்!
நாணி ஒடுங்கி, நங்கை நின்றாள்!
காணுதல் இன்றிக் காளை நகர்ந்தான்!
தோகை அவனைத் தொடர்ந்துபின் சென்றாள்!
பாகியல் மொழியைப் பார்க்கவும் வெறுத்து
நெடுங்கிளை மகிழம் நிழலடி அமர்ந்தான்!
ஒடுங்கிய உளத்தொடும் உயிரொடும் உரையால்
நடுங்கிய வாயொடும் நலிந்த உடலொடும்
தொடங்கிய காதல் இசையினைத் துணித்தான்!
அழுகை பொங்கிட அவனடி வீழ்ந்து
தொழுத கைகளால் அவனுடல் தொட்டாள்!
வலிந்த கைகளால் அவள்கை வாங்கி
மெலிந்த கொடியுடல் மேல்விழத் தடுத்தான்!
ஊற்றாய்க் கண்ணீர் உகுத்தனள் பேதை!
ஆற்றா மைக்கே அவன்சற் றிரங்கி,
'வேண்டுதல் என்'னென, வேய்குழல் அவன்பால்
ஈண்டிய காதல், நெஞ்சினை இறைத்தாள்!
'பொய்நின் அன்'பெனப் புகன்றான்; புழுப்போல்
ஐயை துடித்தாள்; 'ஆவியும் மெய்யும்
நீயே' என்றாள்; நெஞ்சு நடுங்கினாள்!
'வாய்மை உளத்தை வகிர்ந்துபார்' என்றாள்!
'மெய்யோ காதல்' என்றான்; மின்னிழை
'தெய்வமே கரியெனத் தேம்பி யழுதாள்!

‘நம்பினேன் உனை’யென நம்பி உரைத்தே
அம்பொன் மணித்தோள் அணைத்துயிர் நிறுத்தி
கருங்குழல் நீவியும் கண்மலர் பொத்தியும்
பெருங்கதை பேசியும் பிணைந்துடன் பாடியும்
மடுப்புக வாடியும் மலரிதழ் முத்தியும்
வடுப்படக் கிள்ளியும் வளைநுதல் தடவியும்,
உள்ளம் ஒன்றிய உறவோன் பின்னைக்
கள்ளவிழ் மகிழக் கடிமலர் உகுத்துத்
தொடையல் தொடுத்துத் தோகைக்குச் சூடிக்
கடைக்கணால் அழைத்தான்; கன்னியும் நெருங்கினாள்.
அக்கால் ஒருத்தி அவரிடைப் புகுந்தே
தக்கவா றவன்கை தடுத்து, ‘மலரினைத்
தன்குழல் சூட்டுக’ என்றாள்! தகவிலான்
மின்னொடிப் பொழுதில் அவள்குழல் மிடைந்தான்!
மிடைந்த பின்றை மின்னிழை தானும்
கடைநெறி யாளனும் காவின் நுழைந்து
மறைந்தனர்; ஐயை மனந்தீப் பற்ற
அறைந்துகொண் டழுதாள்; அலறி எழுந்தாள்.

கண்ணீர் முத்தம் கழன்றுகொண் டிருந்தது!
உண்ணோர் ஆவி உழன்றுகொண் டிருந்தது!
குருதி உறைந்தது; நெஞ்சு குமைந்தது!
பெருந்தீப் பற்றி ஊரெலாம் பிழைக்க
அத்தீ நடுவில் அவளே ஒருத்தி
சிக்கித் தவிப்பதாய் நினைவு சிலிர்த்தது!
முதியோள் அவள்மருங் குறங்கினாள்; வெளியே
அதிர அலறியது ஆந்தை ஒன்று!
சுவர்க்கோ ழிகளின் சுள்ளென் ஓசை
அவலச் சூழற்கு அருந்துணை நின்றது!
வானத் தெங்கோ மின்னிய மின்னல்
கூனற் கூரையின் குறுகிய பொத்தலில்
ஒளிர்ந்து தேய்ந்தது! இடிசிதர்ந் தொலித்தது!
தொலைவிலோர் தனிநாய் தொண்டை கிழிய
ஊளை யிட்டது! கழுத்துமணி ஒலிக்க
காளைகள் இராப்புல் அருந்திக் கத்தின!
ஐயை பாயலில் அசைவறக் கிடந்தாள்!

மாறி யுடுத்த மனங்கொளல் இன்றிக்
கறந்தபால் காய்ச்சிக் கலயத் தெடுத்துப்
பறந்தாள் நிலாமுகப் பாவையை நாடி!
இடைவழி ஆடுகள் எதிர்ந்தன எனினும்
படைநெடுங் கண்ணைப் பார்க்கிலா திடிந்தாள்!
ஐயை ஐயை ஐயை என்று
மெய்படக் கூவி மேனி நடுக்குறக்
குவடுங் குன்றின் கொடிவழி வாரமும்
அவணுறு சுனைகளும் அலைந்தும் ஐயையைக்
காண்கிலா துள்ளம் கவலுறக் குன்றின்
சேண்படு பெருங்கல் சேர்ந்தனள்; ஆங்கே
நெடுநகர்ப் பாதை நீள்விழி நோக்கிப்
படுகண் ணீரவள் பாதம் நனைப்பவும்
குழல்புரண் டலையவும் கொடிக்கம் பூன்றி
அழல்மெய் யகத்தினுள் அமர்ந்திருந் தாளே!
பதைப்புற முதியோள் பக்கத் தோடி
'சிதைவிலாப் படிவமே; செய்யபொன் னுருவே
துணிந்தனை கொல்லோ! தூய்மை உள்ளமே!
அத்தை ஒருத்தியும் அகற்றினை கொல்லோ!
செத்தபின் அன்றோ சாகாத் திருவே
உன்றனைத் துறப்பேன்; என்னிடம் உரையா
ஒன்றும் உண்டுகொல்! உயிரே உரை'யெனக்
கூவி யழுதாள்! குழலியும் அழுதாள்!
ஆவி உருகிய அத்தை மடியினில்
நிலாமுகம் புதைத்து நீள விசும்பினுள்!
'எலாரும் போயின பின்றைஇவ் வேழையை
ஏன்தனி வளர்த்தீர் அத்தை'யென் றழுதாள்!
'அன்புறு மகளே! அவ்வாறு உரையேல்
என்புது துயர்வர இடிந்தனை இயம்' பெனத்
தன்பழங் கையால் தாவி யணைத்தே
என்பு நெகிழுற இரங்கிக் கேட்டாள்!
கொட்டுநீர் விழியால் குமைந்த பின்றை
நெட்டுயிர்ப் போடு கனவின் நேர்ச்சியும்
அத்தான் அடிவிழுந் தன்புக் கிரந்ததும்
ஒத்துக் கொளாதவன் பின்னுளம் ஒத்ததும்

அதன்பின் இருவரும் ஆடிப்பா டியதும்
புதுமகிழ் மாலை பூங்கை தொடுத்ததும்
அதுதன் குழலுக் கமையச் சூடாது
இடையில் வந்தாள் ஒருத்திக் கிட்டதும்
மடைதிறந் ததுபோல் கண்ணீர் மடுத்தே
மெய்நா நடுங்க மின்னுடல் வாட
ஐயை அவள்துயர் அத்தைக்கு மாற்றினாள்!
கொடுங்கனா முதியோள் கூர்ந்து கேட்டுளம்
நடுங்கினா ளெனினும் நாநடுங் காமல்
'அடி, சிறு பேதையே! அழகும் இளமையும்
குடிகொண் டுள்ள குமரிப் பெண்டிர்க்கு
இதுபோற், கனவுகள் இயற்கையே' என்றும்
'அதுமற' என்றும் ஆறுதல் அளித்தாள்!
ஐயை தாளாது அக்கனா நேர்ச்சியின்
மெய்ப்பொருள் என்னென மேலும் வினவினாள்!
பொய்ப்பொருள் ஒன்றைக் கூறிப் பூவையைத்
தேற்றினா ளாயினும் தேர்ந்த உண்மைக்கு
ஆற்றாது உள்ளம் அழுங்கினாள் முதியோள்!
அதன்பின் அத்தை ஆற்றியும் போற்றியும்
மதுமலர்க் குழலியைக் கெஞ்சியும் கொஞ்சியும்
ஆப்பால் அருத்தி சிறுபொழு தளாவித்
தாய்போல் முகத்தைத் தாங்கி நிறுத்திப்
பச்சை வாயால் பவள இதழ்மேல்
இச்சிச் சென்றே ஏழெட்டு முத்தம்
தந்தவள் துயரம் தணியக் குழைந்து
செந்தா மரைமுகம் சிரிக்கச் சென்றாள்!
அத்தை சென்றதும் அந்தியின் இருள்போல்
அத்தனைத் துயரும் அவள்தோள் படர்ந்தது!
இருப்பினும் அவன்மேல் இருந்தநம் பிக்கை
ஒருமை உளத்துடன் ஓங்கி நின்றது!
நாட்கள் நகர்ந்தன; நங்கையின் உள்ள
வேட்கையும் வளர்ந்தது! வரவுநாள் விரும்பி
விழிமலர் நகர்வழி வெறித்து நோக்கிடும்
பழியறு நெஞ்சம் பலபடப் பறக்கும்!
மெய்மிக மெலிந்து பொன்னிறம் மேயும்

தொய்விடை மார்பகம் விம்மிடத் தொய்யும்!
அத்தை காத்த அன்னையின் அணிகளில்
முத்துத் தொங்கலும் முன்கை வளைகளும்
விண்மீன் என்ன விளங்குமுக் கணியும்
கண்ணைச் சிமிட்டிடுங் காதுக் கம்மலும்
மணிக்கால் தண்டையும் மகிழ்வுறக் கொடுத்தே
அணிந்திட அத்தை சொன்னதால் அணிந்தாள்!
நாளும் குன்றம் நாடுவாள்; அழகுறும்
வால்வெண் கற்களை எண்ணி வருவாள்!
இளையோன் வருநாள் எதிர்ந்தது!
வளைகுலுங் கிடஅவள் வழிநின் றனளே! —(படரும்)

உங்கள் அப்பனையுந்தான்...!

ஒருமுறை பெங்களூரில் திருக்குறள் கூட்டம் ஒன்றில் பாவேந்தர் பேசிக்கொண்டிருந்தார். அக்கூட்டத்திற்குத் திருக்குறள் முனிசாமியும் வந்து மேடையில் பேசுவதற்கென அமர்ந்திருந்தார். பாவேந்தர் தமிழைக் கெடுக்கின்ற 'வையாபுரி' வழிப் பேராசிரியர்கள் ஓரிருவரை மனத்தில் கொண்டு, "தமிழைப் பற்றி அறியாதவன்களெல்லாரும்—வழக்கறிஞருக்கும் அதுக்கும் இதுக்கும் படித்துவிட்டு — எல்லாந் தெரிந்தவன்கள் போல் தமிழ்த்துறைக்கு வந்து அதைக் கெடுத்துக் கொண்டு வருவதுமல்லாமல் திருக்குறளுக்கு வேறு உரை கிரை எழுத வந்துவிடறான்கள்......" என்று மீறிய உணர்வில் உரக்கப் பேசிக் கொண்டிருந்தார். மேடையில் உட்கார்ந்திருந்த திருக்குறளார் (அவரும் வழக்கறிஞர்க்குப் படித்தவர்) அமைதியாக இருக்க மாட்டாமல், பாவேந்தர் தம் பக்கம் திரும்புகையில், "ஐயா...... என்னையுமா சொல்கிறீங்க?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார். உடனே பாவேந்தர் "உங்களை மட்டுமென்ன? உங்கள் அப்பனையுந்தான் சொல்கிறேன்; உங்களுக்கு மட்டும் என்ன தெரியும்? திருக்குறளார் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கின்றீர்களே எங்கே எத்தனைத் திருக்குறளுக்குச் சரியான உரை தெரியும்...... வாங்கள் பார்க்கலாம்!" என்று பேச்சோடு பேச்சாகக் கூறினார். கூட்டத்தில் 'கொல்' என்று நகை எழுந்தது. இதைப் பிற்கால் பாவேந்தரே என்னிடம் நேரிடையாகச் சொல்லி, "இவர் அப்பொழுது பேசாமல் அல்லவோ இருந்திருக்க வேண்டும்" என்று பெருத்த சிரிப்புக்கிடையில் கூறினார். (— ஆ. ர்)

செய்யவேண்டியது......!

ஒருமுறை ஏ. பி. நாகராசன் நடத்திய 'சாட்டை' என்ற இதழில் பாவேந்தரைப் பற்றித் தவருகவும் தரக்குறைவாகவும் ஒரு செய்தி வெளியிடப் பெற்றிருந்தது. பாரதியார் காலத்து அவருடன் இருந்த பாரதிதாசன் அவர் பாடல்களையெல்லாம் திருடி வைத்துக்கொண்டு, அவர் இறந்தபின் அப்பாடல்களை ஒவ்வொன்ருகத் தம்முடைய பெயரில் வெளியிட்டு வருவதாக வந்த செய்தி அது. இச்செய்தியை ஓர் அன்பர் படித்துவிட்டுப் பாவேந்தரிடம் வந்து மிகவும் வருத்தத்துடன் கூறினர். அப்பொழுது பாவேந்தரின் அருகில் வேறு சிலருடன் நானும் நின்றுகொண்டிருந்தேன். பாவேந்தர் செய்தியை அறிந்து சிறிதும் வருந்தாமல் அமைதியாக இருந்தார். நான் உடனே அந்த அன்பரிடம் "அந்த இதழையெல்லாம் ஏன் வாங்கிப் படிக்கிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கவர் "வாங்கிப் படிப்பதால்தானே இதைத் தெரிந்துகொள்ள முடிகின்றது; எனவே அதில் பிழையில்லை" என்று சொன்னர். நான் உடனே, "சரி; அந்தச் செய்தியைத் தெரிந்துகொண்டீர்களே, அதன்பின் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டேன். அவர் "அதைத்தான் இப்பொழுது ஐயாவிடம் வந்து சொல்கின்றேன்; இன்னும் என்ன செய்யவேண்டும்?" என்று என்னை முறைத்தபடி கேட்டார்! நான் என்ன சொல்லப் போகின்றேன் என்பதைப் பாவேந்தர் உட்பட எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். நான் அவரிடம், "ஐயா, அத்தகைய தாள்களை வாங்கிப் படிக்கக்கூடாது; வாங்கிப் படித்து இத்தகைய செய்திகள் வந்திருப்பதாகத் தெரிந்தால், அதை வாங்கிய கடையில் இன்னும் எத்தனைப் படிகள் இருக்கின்றனவோ அத்தனையும் விலை கொடுத்து வாங்கி அக்கடை முன்பே ஒரு தீக்குச்சியைக் கிழித்துக் கொளுத்திவிட்டு வரவேண்டும். அதுதான் நாம் அந்தச் செய்திகளை அறிந்து கொண்டதற்குக் கழுவாய்" என்று கூறினேன். பாவேந்தர் முகத்தில் எழுச்சி தோன்றியது. உடனே அந்த அன்பரிடம், "கேட்டியா...? அதைச் செய்கிறதுக்குத் திறனில்லே... என்கிட்டே வந்து சொல்ல வந்துட்டியே... போ" என்று சீறிப் பாய்ந்தார். அடுத்த நொடியே அந்த அன்பர் அவ்விடத்தை விட்டு அகன்ருர்.

(– ஆ. ர்.)

தமிழ் நானூறு!

பாட்டு கஎ. வெப்புண் நீர். ம. இலெ. தங்கப்பா பாடியது.

அணிமையர் பதறிலர் ; அயலோர் புரிந்திலர்;
தகவில் செய்தித் தாளரும் விரித்திலர்;
குழம்வேட் டெஃகம் கொடியெனத் தூக்கி
அழல்வெறி ஆடும் அரைசரும் மதித்திலர்
மேநாள்,
மொழிவழி மாநிலம் முதல்வோர் மறுப்ப
அழிபசி நோற்றுேன் உயிர்விடு ஞான்றைக்
கொதித்தெழுந் தடர்ந்த வடுகர் போல
இத்தமிழ் மக்களோ எழுகிலர், இவர்க்கே
பொருந்தா அயன்மொழி புகுத்தல் பொருஅ(து)
இருந்தமிழ் பேணக் குமிழ்த்தபே ரன்பால்
வெப்புண் நீரின் வறிதுடல் சுவற
ஒள்ளெரி புகுந்தியோ மகனே,
நல்லுயிர் மெய்ப்பயன் நனிகெட விடுத்தே!

(இந்தி மொழிக்கு எதிர்ப்பிணைக் காட்டுமுகத்தான், சிவலிங்கம் என்னும் இளையோன் தீப்புகுந் திறந்த ஞான்றை இரங்கிக் கூறியது)

பாட்டு : கஅ. நின்றெரி கொழுவிறகு ம. இலெ. தங்கப்பா பாடியது

தண்டமிழ் மூச்சின் புலவரும் அல்லர்
தொண்டு முற்றிய தலைவரும் அல்லர்
அறிவுதுறை போகிய தெளிவினர் அல்லர்
செறியுணர் வாழ்த்த செம்மையர் அல்லர்
குறியுங் கொள்கையும் நெறியும் முயலாப்
பொறி செல் வாழ்க்கைப் பொதுவோர் தாமே!
மனை, மகார், கிளைஎனு மயற்கை முழ்கிக்
குடருங் கழுவப் பொழுதவர்க் கின்றே!

ஆயினும்,
செந்தமிழ் எழுச்சிக் கொடுவெந் தழலுள்
படிற்று மொழி வடவர் பகைதெற மாட்டிய
நின்றெரி கொழுவிற காயினர் அவரே
பிற்றை அவிந்து பிழம்பறக் கரியினும்
எரியுண் ஞான்றவர் கான்ற செழுஞ்சுடர்
இருள் சூழ் தமிழகத் தொளிமெலப் பரவ
உரிமை விளக்கம் எடுத்தது மன்னே!
'தகும் யாம்!' என்று தமிழ்ப்பறை முழக்கி,
"முகம்புகு" கெனலும் அகம்புகுந் தொளித்த
பொய்ம்மலி தலைமையர் புரையினும்
எண்மடங் குயர்விவ் வெளியோர் வினையே!

(இந்திகடி பேரெழுச்சியிற் பங்கு பெற்றுச் செந்தமிழ் மறம் கொளுவிய பொதுநிலை மாந்தரைப் பாடியது)

பாட்டு கக. **கிடத்திய வெங்கடு:** ம. இலெ. **தங்கப்பா** பாடியது

தீப்பாய்ந் தன்ன யாப்பறப் பாய்ந்து,
நெரிந்து வீழ் யாக்கை நெளிய முறுக்கி,
நரம்பெழ விசிப்ப, உரங்கெட அயின்று
மண்ணியல் குடம்பை தண்ணுறக் கிடத்திய
வெங்கடு அன்றே வாய் கொடுங் கூற்றம்!
யான்மற் றுரைப்பல் கூற்ரு யினவே!
ஒன்றே, மயக்கீர்ம் மொழியின் ஒருமை கழறிப்
பயக்கெழு வண்டமிழ் மரபொடுந் தொலைச்சி
ஒருதாம் ஆள்வலம் தருக்குவன் கொடுங்கோல்
வெறியியன் வடவர் நெறிமருள் படிறே!
இரண்டே, புற்கை நக்கினும் உரிமை இனிதென
நற்றிறம் தெளியா நாணமில் அடைப்பத்(து)
அறிவறை போகிப் பீடு துறந்து
தொழும்ப வல்சிக் கங்காந் தேங்கிச்
செழும்பைந் தீந்தமிழ் பூவிலை கூவுறும்
அரைசிழி தமிழர் புரைசூழ் கயவே!
மூன்றே, முடை நா ரெழுக்கத்து வரையா வாழ்க்கை
வடுபுறம் கரப்ப இடுபுகழ் இடூஉம்
விரகியல் தேறிய வினைபோல் நடிப்பின்
மீமிசை மொழிந்தே அவல இழிதரும்
துப்பில் போலித் தொண்டர்தம் பொய்யே!
நான்கே, எழலும் எழாஅர், விழலும் விழாஅர்
இழிபழி இறப்ப ஊர்தலும் ஓம்பார்
உரிமை காவாப் பொறியறு வாழ்க்கை
உறுப்பொக்கு மாக்கள் விழிப்பில் தாழ்வே!
களர் வெம் மருங்கின் கதநாய் கூட்டி
எயினர் அலைக்கும் புல்வாய் போலப்
பல்குறும் பலைப்ப ஒல்குறும் எந்தமிழ்
படுதுயர் பொருது புழுங்கி, நஞ் சுண்டு
சிராப்பள்ளிக் கீரனூர் மறுகின்
எழாப்பள்ளி கொண்ட இளையநின் உயிர்க்கே!

(இந்தி எதிர்த்து நஞ்சுண்டு துஞ்சிய கீரனூர் முத்துவைப் பாடியது)

பாட்டு ௨0 : வையையும் அளிது !
மகிபை. பாவிசைக்கோ பாடியது.

அளிதே வையை நெடும்புனல் யாறே !
கிளைபல் லருவி கறங்கு வாரியின்
அழுந்துநீர் ஒலியல் என்பதன் சீரே! அன்றியும்,
கொடுமுடி பரந்த குடதிசை அடுக்கத்து
எதிர்புதிர்த் தாகிச் சிதறுகூழ்ங் கற்கள்
ஒருங்கிணைய நிலைநெருக்கிச்
சமனுற முனை உரைசிச்
சேர வளைத்தல் மற்றுஅதன் திறனே !
அலைக்கை விரிப்பில் நெடுமரம் வளைஇயும்
குறிச்சிபடு தொகுவளன் சேரத் தழீஇயும்
நீள்வலம் படுத்த சால்பு அதன் நடையே!
எதிர்வன நொடிப்பில் வீழ்த்தி, வலிகெட
நுரையெழச் சுழித்தல் ஆம் அதன் ஒறுப்பே !
கரையிரு மருங்கும் காண்குநர் வியப்ப
நுரைவீ ஏந்தி நொடிப்ப நடந்து
பாவலர் ஏத்துறும் பாங்கு அதன் பேறே !
எனவாங்கு,
சீர்பல குயின்ற நீஇர் ஒழுங்கும்
அடைகரை பொருஉம் கடிய விரைவும்,
ஆ அழ் நிலையும் ‘ஓ’வென் ஆர்ப்பும்
தமிழ்நடு வையத்து இமிழ்கடல் எழுந்தெனப்
பகைப்புலம் நடுக்குறூஉம் புகைக்கொடித் தறுகண்
இடிக்குரல் மதுரை மாணவர்
நெடுஞ்சீர் வெள்ளத் தொடுங்கிய பின்றே !

பாட்டு உக : இன்புறு கலக்கம் **சித்தார்த்தன்** பாடியது.

உயர்நோக் கமைந்த நெஞ்சின் பிணிந்தன்று
மயிர் நீப்பின் வாழா மரையின் சிறந்தன்று
உள்ளம் கலங்கி உந்துவல் லுணர்விறல்
நந்தமிழ் காக்க நடைகொள்
செம்படையாறு நின்மகன்
சென்றனன் கொல்லோ இலேயோவெனக் கலுழ்வை
கவலறு காதலாகிக்
கட்டுண்ட நட்பின் ஏதம் அறியான்
இன்புறு கலக்கம் எய்த
என்வயின் விடை பெறுன் அடுகளம் செலவே!

பாட்டு உஉ : புன்மொழி புறந்தரல்
- **காரை. இராவண்ணன்** பாடியது.

மன்னிய சிறப்பின் முத்தமிழ் வழுத்தி
ஒன்னார் சிறுமொழி ஒவல் குறியாய்த்
தாவின் றெழுதரு தமிழ்ப் பெரும் படைஞர்
இவர்யார் என்குவை யாயின்; இவரே,
மேல்வரு புன்மொழி ஆற்று ராகிய
மால்வரை நெடுந்தோள் மைந்துடை யாடவர்;
வன்னெஞ் சுடையர்; புன்மயிர் யாக்கையர்;
பல்கலைக் கழகம் படர்வோ ரிவரே;
அல்மொழி தந்த அஞர்கடிந் தின்றே
உறுகட லன்ன உறுத்தெழுந் தனரே!
அதரிடைத் தடுப்போன், ஆற்றல் அறியா
விதுப்புறு ஆளுநன் மன்னே; இவனும்
அறந்தெரி கோலே அறிகுவ னல்லன்;
உழையோர் உரையினும் நுழைபுல னிலனே.
ஏ, ஏ! தோழி இவனே,
ஆயா துஞற்று மமைச்சென் போனே?

(இந்தி மொழித் திணிப்பை ஆற்று தெழுந்தோர் இவரெனவும், அவரைத் தடுக்க முற்பட்ட ஆளுநர் இத்தன்மையர் எனவும் பாடியது)

நூற் சுருக்கம்

பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்.

மொழிநூற் பேரறிஞர் பண்டித, புலவ, கலைத்தலைவர்.
ஞா. தேவநேயப் பாவாணர் எழுதியது.

1. நாகரிகம் என்னும் சொல்விளக்கம் : நாகரிகம் என்பது நகர மக்களின் திருந்திய வாழ்க்கை. நாகரிகம் என்னும் சொல் நகரம் என்னும் சொல்லின் திரிபாகும். மாந்தர் முதல் முதல் நகர நிலையிலேயே நாகரிகம் அடைந்துள்ளனர். அதனால் நகரப் பெயரினின்று நாகரிகப் பெயர் தோன்றியுள்ளது. ஆங்கிலத்திலும் நாகரிகத்தைக் குறிக்கும் இலத்தீனச் சொல் நகரப் பெயரினின்று தோன்றியதே. L. Civitas, city or city-state. Civis - citizen, L. Civilis - E. civil - civilize.

நகரங்கள் தோன்றியது உழவுத் தொழிற்குச் சிறந்த மருத நிலத்திலேயே. இல் வாழ்வானைக் குறிக்கும் husbondi (house dweller) என்னும் பழ நார்வேயச் சொல்லினின்று 'உழு' என்று முன்பு பொருள்பட்ட husband என்னும் ஏவல் வினைச் சொல்லும், உழவனைக் குறிக்கும் husband man எனும் பெயர்ச்சொல்லும்; உழவுத் தொழிலைக் குறிக்கும் husbandry என்னும் தொழிற்பெயரும் ஆங்கிலத்தில் தோன்றியிருப்பது இங்குக் கவனிக்கத் தக்கது. நிலையான குடியிருப்பால் ஒழுக்கப் பொறுப்பும், ஊர்ப் பெருக்கமும் ஆட்சி அமைப்பும் ஏற்பட்டன. இதனால் மருத நிலமும் உழவுத் தொழிலும் எங்ஙனம் நாகரிகத்தைத் தோற்றுவித்தன என்பது தெளிவாகும்.

நகர் என்னும் சொல் முதன் முதல் ஒரு வளமனையையும், அரசன் மனை போன்ற இறைவன் கோயிலையும் குறிக்கலாயிற்று. பின்பு சினையாகு பெயராய்க் கோநகரையும் பேரூரையும் குறித்தது. இங்ஙனம் நாகரிகம் எனும் சொற்கு மூலமான நகர் என்னும் சொல் தூய தமிழே! அதனின்றும் திரிந்தமைந்த நாகரிகம் என்னும் சொல்லும் தென் சொல்லே!

பண்பாடு என்னும் சொல் விளக்கம்: பண்படுவது பண்பாடு. பண் என்னும் பெயர்ச்சொற்கு மூலமான பண்ணுதல் என்னும் வினைச்சொல்லும், திருந்தச் செய்தலையும் செவ்வையாய் அமைத்தலையும் குறிக்கும். பண்பாடு பல பொருட்கு உரியதேனும் நிலமும் மக்கள் உள்ளமும் பற்றியே பெருவழக்காகப் பேசப்பெறும். ஆங்கிலத்திலும் culture என்னும் பெயர்ச்சொல் சிறப்பாக நிலப்பண்பாட்டையும் உளப்பண்பாட்டையும் குறிப்பது கவனிக்கத் தக்கது.

நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் வேறுபாடு: நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை; பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம். உள்ளத்தின் செம்மை பண்பாடும், உணவு. உடை, உறையுள் முதலியவற்றின் செம்மை நாகரிகமும் ஆகும். மாளிகையிற் குடியிருப்பதும், பட்டாடை அணிவதும், இன்னியங்கியில் செல்வதும், இன்பமாய்ப் பொழுது போக்குவதும் செல்வ வாழ்க்கையே அன்றி நாகரிக வாழ்க்கை ஆகா. நாகரிகத்திலும் உயர்ந்த நிலையே பண்பாடாயினும் நாகரிகமின்றியும் பண்பாடுண்டு. முழுத் துறவியர் ஆடையின்றியும் நீராடாதும் மண்ணில் இருப்பர். ஆயினும் அவர் பண்பாட்டில் தலை சிறந்தவராவர்.

இந்திய நாகரிகம் தமிழரதே யாதல்: வேத ஆரியர் மேலையாசியாவினின்று இந்தியாவிற்குட் புகுந்த காலம் கி. மு. 2000-1500 அன்று அவர் நாடோடிகளாயிருந்தனர். அவருக்கு இலக்கியமுமில்லை. அவர் பேசிய மொழி சொல்வளமற்றதாயிருந்தது. இந்தியாவிற் காலூன்றிய பின்னரே அவர் 'இருக்கு' என்னும் தம் முதல் வேதத்தை யாத்தனர். அவ்வேதமொழி வட இந்தியப் பிராகிருதத்தையும் திரவிடத்தையும் தழுவிய தென்பது, அதில் எகர ஒகரக் குறிலின்மையாலும், பல தமிழ்ச் சொற்களுண்மையாலும் தெரிய வருகின்றது. தமிழ்வேத ஆரியத்திற்கு முந்தியதாயிருப்பதோடு வேதப் பெயர்களே தமிழ்ச் சொற்களின் திரிபாகவுமிருக்கின்றன.

வேதம் : விழித்தல் - பார்த்தல், காணுதல், அறிதல்.-
விழி - அறிவு; ஓதி. (ஞானம்)
விழி - L. vide. - vise. Skt. Vid - Veda
ஒ. நோ: குழல் - குடல், - ஒடி - ஒசி.

சுருதி : செவியுறுதல் - கேட்டல்.
செவியுறு - ச்ரு - ச்ருதி - கேள்வி.

இந்திய ஆரியர் பிற்காலத்தில் தமிழரோடு தொடர்பு கொண்ட பின்னரே சமற்கிருதம் என்னும் அரைச் செயற்கையான பொத்தக மொழியை அமைத்து, அதிற் பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் மொழி பெயர்த்துக் கொண்டனர்.

தமிழர் தென்னாட்டுப் பழங்குடி மக்கள். தமிழ் தோன்றியது முழுகிப் போன குமரிக் கண்டத்தில் 50,000 ஆண்டுகட்குமுன். தமிழ் நாகரிகம் தோன்றியது 20,000 ஆண்டுகட்குமுன். தமிழிலக்கண இலக்கியம் தோன்றியது கி. மு. 10,000 ஆண்டுகட்கு முன். இந்திய நாகரிக அடிப்படை தமிழ் நாகரிகமே. அஃது அறியப்படாமலிருப்ப தற்குக் காரணம் ஆரியர் சூழ்ச்சியே!

" திராவிடர் இங்ஙனம் மொழியில் ஆரியப் படுத்தப்பட்டபோது, ஆரியர் நாகரிகப் பண்பாட்டில் திராவிடப்படுத்தப் பெற்றனர். " - என்பார், கில்பெட்டு சிலேற்றர்.

குமரிக்கண்ட இடப்பெயரும் மூவேந்தர் குடிப் பெயரும்.

தமிழன் பிறந்தகமும், பழம் பாண்டி நாடும் தென் மா வாரியில் முழுகிப்போன பெருநிலமுமான குமரிக் கண்டத்தின் தென்கோடி யடுத்து, பனிமலை போலும் ஒரு மாபெரு மலைத் தொடர் இருந்தது. அதன் பெயர் குமரி அதனாலேயே முழுகிப்போன நிலமும் குமரிக் கண்டம் எனப்பட்டது. குமரன், குமரி -- என்பன 'கும்' என்ற சொல்லடியாகப் பிறந்த தூய தென்சொற்களே. குமரிக் கண்டத்தின் வடகோடியில் குமரி என ஒரு பேரியாறு யிருந்தது. மதுரை என்பது குமரிமலையிற் பிறந்தோடிய பஃறுளியாற்றங்கரையில் அமைந்த பாண்டியரின் முதல் தலைநகரும் தலைக்கழக இருக்கையுமாகும். பாண்டியர் மதிக் குலத்தாராகையால், மதியின் பெயரால் தலைநகர்க்கு மதிரை எனப் பெயரிட்டனர். அது பின்னர் மதுரை எனத்திரிந்தது. குமரிமலை முழுகுமுன்போ, பின்போ குமரி நாட்டினின்று வடக்கே சென்ற தமிழர் வழியினரே கண்ணன் வாழ்ந்த மதுரையினையும் அமைத்தனர். அதற்கு அப்பெயரிட்டது அவர்தம் இடத்தை நினைவு கூர்தற் பொருட்டாகும். மதுரையென்று முதலிற் பெயர் பெற்றது வைகை மதுரையன்று; பஃறுளியாற்றங்கரையதே! ஆதலின் வைகை மதுரையைச் சார்ந்த திருமருதமுன்றுறையால் மதுரைப் பெயர் வந்ததென்பது பொருந்தாது.

ஆரியர் வருமுன், நாவலந்தேயம் முழுவதும் மூவேந்தர் நேரடி ஆட்சிக்குட்படா விடினும் அதிகாரத்திற் குட்பட்டிருந்தது. மதி, கதிரவன், நெருப்பு ஆகிய முச்சுடரையும் முறையே பாண்டியரும், சோழரும், சேரருமே தம் குலமுதலாகக் கொண்டிருந்தனர். பாரதப் போர்க்கு முந்தியே பாண்டியர் இருந்தனர். பாண்டவன் என்னும் சொல்லைப் பாண்டியன் என்னும் பெயர்க்கு மூலமாகக் காட்டுவது வரலாற்றறிவில்லார் கூற்றுகும். காளையைக் குறிக்கும் பாண்டி அல்லது பாண்டியம் என்னும் சொல்லினின்றே அப்பெயர் வந்ததாம்.

சொல் என்றால் நெல்லாம். சொல் மிகுதியாக விளைந்தது சோழ நாடு. சொல்லாக்கத்திரிவில் லகரம் ழகரமாவது இயல்பே.

சேர நாடு முழுவதும் பெரும்பாலும் மேற்குத் தொடர்ச்சி கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் அடிவாரச் சரிவே. மலையடிவாரம் சாரல் எனப்படும்.

சாரல் - சேரல் - சேரலன். - சேரன்.

பண்டைத் தமிழ் நாகரிகம்.

முதற்காலத் தமிழ்மக்கள் இக்காலப் புலவரினும் சிறந்த நுண்மாண் நுழை புலத்தினராதலின், காட்சி, கருத்து எனும் இருவகைப் பொருள்களையும் கூர்ந்து நோக்கியும் நுணுகியாராய்ந்தும் அவற்றின் சிறப்பியல்பிற்கேற்ப அழகிய பொருட் (காரணியக்) குறிகளாகவே எல்லாச் சொற்களையும் வேறுபடுத்தல், ஒன்று படுத்தல், இனப் படுத்தல் என்னும் மும்முறையில் அமைத்திருக்கின்றனர்.

(1) **வேறுபடுத்தல் :** கிளை நுனியில், காம்புடன் தனித்தும் அடர்ந்தும் பெரும்பாலும் முட்டை வடிவில் மெல்லிதா யிருப்பது இலை. தண்டையொட்டி ஈட்டி போல் ஒடுங்கி நீண்டிருப்பது **தாள்.**

தாளாக ஓங்கி மடிந்து தொங்குவது **தோகை.**

மட்டையொடு தோன்றி விசிறி வடிவில் முரடாயிருப்பது **ஓலை.**

இடங்கர், கராம், முதலை என மூவகையாக முதலைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

சொல்லுதலின் வகைகளைக் குறிக்க ஏறத்தாழ நாற்பது சொற்கள் தமிழில் உள்ளன.

ஆரியர் வருமுன், நாவலந்தேயம் முழுவதும் மூவேந்தர் நேரடி ஆட்சிக்குட்படா விடினும் அதிகாரத்திற் குட்பட்டிருந்தது. மதி, கதிரவன், நெருப்பு ஆகிய முச்சுடரையும் முறையே பாண்டியரும், சோழரும், சேரருமே தம் குலமுதலாகக் கொண்டிருந்தனர். பாரதப் போர்க்கு முந்தியே பாண்டியர் இருந்தனர். பாண்டவன் என்னும் சொல்லைப் பாண்டியன் என்னும் பெயர்க்கு மூலமாகக் காட்டுவது வரலாற்றறிவில்லார் கூற்றாகும். காளையைக் குறிக்கும் பாண்டி அல்லது பாண்டியம் என்னும் சொல்லினின்றே அப்பெயர் வந்ததாம்.

சொல் என்றால் நெல்லாம். சொல் மிகுதியாக விளைந்தது சோழ நாடு. சொல்லாக்கத்திரிவில் லகரம் ழ கரமாவது இயல்பே.

சேர நாடு முழுவதும் பெரும்பாலும் மேற்குத் தொடர்ச்சி கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் அடிவாரச் சரிவே. மலையடிவாரம் சாரல் எனப்படும்.

சாரல் - சேரல் - சேரலன். - சேரன்.

பண்டைத் தமிழ் நாகரிகம்.

முதற்காலத் தமிழ் மக்கள் இக்காலப் புலவரினும் சிறந்த நுண் மாண் நுழை புலத்தினராதலின், காட்சி, கருத்து எனும் இருவகைப் பொருள்களையும் கூர்ந்து நோக்கியும் நுணுகியாராய்ந்தும் அவற்றின் சிறப்பியல்பிற்கேற்ப அழகிய பொருட் (காரணியக்) குறிகளாகவே எல்லாச் சொற்களையும் வேறுபடுத்தல், ஒன்று படுத்தல், இனப் படுத்தல் என்னும் மும்முறையில் அமைத்திருக்கின்றனர்.

(1) **வேறுபடுத்தல் :** கிளை நுனியில், காம்புடன் தனித்தும் அடர்ந்தும் பெரும்பாலும் முட்டை வடிவில் மெல்லிதா யிருப்பது இலை. தண்டையொட்டி ஈட்டி போல் ஒடுங்கி நீண்டிருப்பது **தாள்.**

தாளாக ஓங்கி மடிந்து தொங்குவது **தோகை.**

மட்டையொடு தோன்றி விசிறி வடிவில் முரடாயிருப்பது **ஓலை.**

இடங்கர், கராம், முதலை என மூவகையாக முதலைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

சொல்லுதலின் வகைகளைக் குறிக்க ஏறத்தாழ நாற்பது சொற்கள் தமிழில் உள்ளன.

(2) **ஒன்றுபடுத்தல் :** யானைக்கும் தேன்வண்டிற்கும் முகத்தின் முன் ஓர் உறிஞ்சி (Prboscis) உள்ளது. இந்த ஒப்புமையைக் கண்ட முதற்காலத் தமிழர் இரண்டிற்கும் தும்பி எனப் பொதுப்பெயர் இட்டனர்: தூம்பு - தும்பு - தும்பி - தூம்பு (குழாய்) போன்ற உறுப்பையுடையது.

(3) **இனப்படுத்தல் :** எ-டு : வேம்பு, கறிவேம்பு, நாய்வேம்பு, நிலவேம்பு, நீர்வேம்பு.

இடுகுறியின்மை : 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பியம். ஆனால் பல சொற்கட்குப் பார்த்த மட்டில் பொருள் தோன்றாது. பலா, பனை, பொன், மரம் முதலியவற்றை மொழி நூலறிவும் சொல்லாராய்ச்சியுமில்லா இலக்கண வுரையாசிரியர் இடுகுறியென்று குறிப்பது வழக்கம். பலா, பருத்த பழத்தையுடையது. பல் - பரு - பருமை. ஒ. நோ. சில் - சின் - சிறு.

பனை, கருக்குமட்டையுடையது. பல் - பன் - அறு வாட்பல், பன்னறுவாள்; பன் வைத்தல் என்னும் வழக்கு நோக்குக- பன் - பனை - பற்போன்ற கருக்குள்ளது.

பொன், பொற்பு அல்லது பொலிவுள்ளது. பொல் - பொலி - பொலிவு. பொல் - பொற்பு — அழகு. பொல் - பொலம் - பொலன். பொல் - பொன். —

மரம், உணர்ச்சியற்றது, மதமதப்பு — உணர்ச்சியின்மை, திமிர். மதம் — மரம். மதத்தல் — மரத்தல். தமிழில் எல்லாச் சொற்களும் இயற்கையான முறையில் அமைந்தவை. குமரிக்கண்டத்தில் தமிழ் தவிர வேறொரு மொழியும் வழங்கவில்லை.

தமிழிலக்கணம், உயர்திணை அஃறிணைப் பாகுபாடும், ஓரியல் ஒழுங்கும் உடையது. யான் யாம் யாங்கள், நான், நாம் நாங்கள் நீன், நீம், நீங்கள், தான், தாம் தாங்கள் என்னும் மூவிடப் பகரப் பெயர்களும், சுட்டுப் பெயர் வினாப் பெயர்களும் ஒன்று முதல் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது வரைப்பட்ட எண்ணுப் பெயர்களும் கொண்டுள்ள ஓரியலமைப்பை வேறெம் மொழியிலும் காணமுடியாது.

பொருட்களின் தன்மை பற்றிய பாலமைப்பும், பால் இசைவும் வடமொழியில் இல்லாதன.

புலமக்கள் அமைப்பு: உரைநடை, செய்யுள் என மொழிநடை இருவகை. செய்யுள் புலமக்கள் அமைப்பு. அது பாட்டும், பாவும் என இருவகையும் உரைநடை பண்பட்டு இசைப்பாட்டாகவும், இசைப்

பாட்டு பண்பட்டுச் செய்யுளாகவும் திருந்தும். செய்யுளே மொழியின் உச்ச நிலையாம். வெண்பாவும், கலிப்பாவும் போன்ற செய்யுள் வகைகளை வேறெம் மொழியிலும் காண்டலரிது. அம்போதரங்கம், வண்ணகம் எனும் இரண்டும் தென் சொற்களே :

அம்முதல் - பொருந்துதல், ஒட்டுதல்.
அம் - ஆம் - நீர்
அம் - அம்பு - நீர்.
ஒ. நோ: கும் - கும்பு. செம் - செம்பு.
தரங்கு (1) ஈட்டி போன்ற குத்துக் கருவி.
(2) கரையைக் குத்தும் அலை.

வண்ணம்

வள் - வளை. வளைத்தல் - எழுதுதல், வரைதல்.
வள் - வரி - எழுத்து.
வரி + அணம் - வரணம் -- எழுத்து, எழுதும் நிறம்
-- நிறம்பற்றிய குலம்.
வரணம் - வர்ண (வடசொல்)
வள் - வண் - வண்ணம்
ஒ. நோ. - திள் - திண் - திண்ணை.

துப்புரவு : பண்டைத் தமிழர் உடல் நலனுக்கும் தூய்மைக்கும் உரிய பல நல்ல பழக்கங்களைக் கையாண்டனர். நாள்தோறும் குளித்தனர்; நறுமணப் பொடிகள் பூசினர். எண்ணெய் தேய்த்துத் தலை முழுகினர். அழுக்கைப் போக்கச் சீயற்காய், அரைப்பு, உசிலைத்தூள் பாசிப் பயற்றுமா, களிமண் முதலியவற்றைப் பயன்படுத்தினர். சீயற்காய் அல்லது சீக்காய் என்பது அழுக்கைப் போக்கும் காய் என்று பொருள்படுவது. சிகைக்காய் என்பதன் மரூஉ அன்று.

சீத்தல், துடைத்தல், போக்குதல், துப்புரவாக்குதல் என்னும் பொருட்களில் இலக்கியத்துள் வந்திருப்பது காண்க.

ஊண்: உலகில் முதன் முதல் உணவை நாகரிகமாய்ச் சமைத்துண்டவன் தமிழனே. ஏனைய நாட்டினரைப்போல் அல்லாமல் உணவைச் சோறும் கறியும் என இரண்டாக வகுத்து, கறி வகைகளைச் சுவையும் உடற்கு வலுவும் தந்து நோயைத் தடுப்பனவாய பல மருந்துச் சரக்குகளை உசிலையாகச் சேர்த்து ஆக்கி உண்டு வந்த பெருமை தமிழனதாகும்.

தமிழர் விருந்துள் தலை சிறந்தது திருமண விருந்து. அதிற் பதி னெண்வகைக் கறியும், கன்னலும் (பாயசம்) படைக்கப்பெறும். பதி னெண்வகைக் கறிகள், அவியல், கடையல், கும்மாயம், கூட்டு (வெந்தாணம்), துவட்டல், புரட்டல், பொரியல், வறுவல், புளிக்கறி, பச்சடி (ஆணம்), அப்பளம், துவையல், ஊறுகாய், வற்றல், உழுந்து வடை, காரவடை, தேங்குழல், முக்கனிகளுள் ஒன்று என்பன. கும்மாயம் குழைய வெந்த பருப்பு அல்லது பயறு. வெந்தாணம் (வெந்த ஆணம்) என்பது இன்று வெஞ்சணம் என மருவி வழங்கு கின்றது. இது வட சொல் அன்று.

திண்மை நிலை பற்றி, நீர், சாறு, தீயல், இளங்குழம்பு, குழம்பு, கூட்டு எனக் குழம்பு பலவகைப்படும். அவ்வாறே சோறும் சருக்கரைப் பொங்கல், வெண்பொங்கல் போலப் பலவகைப்படும். ஊன்சோறு அல்லது புலவு தமிழகத்தில் தோன்றிப் பின்பு வழக்கற்றது. முகமதி யரிடமிருந்து கற்றுக்கொண்டதன்று.

வெள்ளாடு, குறும்பூழ், உடும்பு, கோழி முதலியவற்றின் இறைச்சியைத் தமிழர் விரும்பியுண்டனர். பால், நெய், தயிர், மோர், வெண்ணெய், நெய் என்னும் ஆனைந்தையும் பயன்படுத்தினர்.

குடிப்பு வகைகளுள் கள்ளையே சிறந்ததாகக் கொண்டனர். கள் எனுஞ் சொல் வெறிநீர், பதநீர் (தெளிவு அல்லது பனஞ்சாறு), மட்டு (சர்பத்து), தேன் என்னும் நால்வகையைக் குறிக்கும். இந்த நான் கையும் பயன்படுத்தினர் பண்டைத் தமிழர். இவற்றுள் வெறிநீர் வகையே வள்ளுவரால் கண்டிக்கப்பட்டது. வெறிநீர் இயற்கைக் கள்ளும் செயற்கைக் கள்ளும் என இருவகைத்து. பனங்கள்ளும், தென்னங்கள்ளும் ஈச்சங் கள்ளும் இயற்கை. அரிசிச் சோற்று நீரைப் புளிக்க வைத்து அரிக்கப் பட்ட அரியலும் மேனுடுகளினின்று வந்த மதுக்கள்ளும் செயற்கை.

உடை : தமிழகத்திற் பழங்காலத்திலேயே நெசவு தோன்றிவிட் டது. கி. மு. 3000 ஆண்டுகட்கு முன் மேனுடுகட்கு இந்தியாவி னின்றே துணி ஏற்றுமதியானதென்று வயவர் யோவான் மார்சல் கூறியுள்ளார். அக்கால இந்தியா தமிழகமே. பருத்தி தொன்று தொட்டுத் தென்னுட்டில் விளைந்து வருகின்றது. நூற்றற்குப் பஞ்சைச் சுருளாகத் திரட்டி வைப்பதனுல் நூல் நூற்றலைக் கொட்டை நூற்றல்

என்பது வழக்கு. நூற்கும் கருவி சுற்றும் சக்கரமுடைமையால் இருட்டு அல்லது இருட்டை எனப்பட்டது. இறத்தல் — வளைதல், இறகு — வளைந்த தூவு. இறவு — கூரையின் சாய்ப்பு.

இறை — இறைஞ்சு — வணங்கு.

இற — இரு - வளைந்த பெருங்கூனி.

இரு — இருட்டு. (1) பெருங்கூனி.
(2) தேன்கூடு.
(3) நூற்கும் சக்கரம்.

இருட்டு, இருட்டை, இருட்டினம் என்னும் மூவடிவும் இந்தியில் ரஹட், அல்லது ரஹண்ட்டா என்னும் வடிவில் நூற்குங் கருவியைக் குறித்து வழங்குகின்றன. மூலம் தென் சொல்லே.

பண்டைத் தமிழ் நாட்டில் நெய்யப்பட்ட ஆடை வகைகளுள் 36 வகைகள் அடியார்க்கு நல்லாரால் குறிக்கப் பெற்றுள. இவையல்லா மல் கம்பலம், கலிங்கம், காழகம், சீரை, துகில், தூசு, படம் முதலிய பலவுள. அறுக்கப்படுவதனுல் அறுவை என்றும், துணிக்கப்படுவத னுல் துணி என்றும், சவண்டிருப்பதனுல் சவளி என்றும் ஆடை பல பொதுப் பெயர் பெறும். சவளுதல் — துவளுதல். மென்காற்றிலும் ஆடுவது ஆடை. சவளி என்னும் தமிழ்ச்சொல் ஜவளி என்று தெலுங்கிலும் ஜவளி என்று கன்னடத்திலும் எடுப்பொலியுடன் ஒலிக்கப்படுவதாலும், தமிழிலும் அங்ஙனம் இவற்றைத் தமிழர் ஒலிப் பதாலும் வடசொல்லென்று தவருகக் கருதப்படுகின்றது. வட மொழி யில் இச்சொல் இல்லை.

அணி : பண்டைத் தமிழகத்தில், சிறந்த வகையில் பொன், வெள்ளி, முத்து, மணி முதலிய கருவிகளும், தேர்ந்த பொற்கொல்லரும் அணிபவரும் இருந்தனர். இக்காலத்தும் உலகில் மிகுதியாய்ப் பொன் கிடைக்குமிடம் ஆத்திரேலியாவும் தென்னுப்பிரிக்காவுமாகும். இவை முழுகிப்போன பழந்தமிழகமான குமரிக் கண்டத்தைச் சார்ந்தவை. ஆதலால் குமரி நாட்டிலும் தமிழர்க்கு ஏராளமாகப் பொன் கிடைத் திருக்கவேண்டும். குமரிக் கண்டம் முழுகிய பின்பும், கொங்கு நாட் டில் மிகுதியாய்ப் பொன் கிடைத்தது. இன்று தங்கச் சுரங்கமுள்ள குவளாலபுரம் (கோலார்) கொங்கு நாட்டைச் சேர்ந்ததே; கொங்கு நாடு பண்டைத் தமிழகத்தின் ஒரு பகுதியாகும். முதற்காலத்தில்

சார்சு வாசிங்டன் கார்வர்

"வழுதி"

ஓராண்டில் அச் சிறு பள்ளியில் சார்சின் படிப்பு முடிந்துவிட்டது. அவன் அறிவுப்பசி அத்துடன் அடங்கவில்லை. அவன் தெரிந்து கொள்ள விரும்பியன எவ்வளவோ இருந்தன. மழையையும் பனியையும் பெய்யச் செய்வது எது? மலர்கட்கு வண்ணம் கொடுத்தவர் யார்? நாம் நினைத்தால் அந்த வண்ணங்களை மாற்றி அமைக்க முடியுமா? இவற்றுக்கு எந்தப் பள்ளியில் விடை கிடைக்கும் என்று சிறுவன் துடித்தான். அவ்வூரிலிருந்து 75 கல் தொலைவில் கான்சாசு மாநிலத்தில் போர்ட் ஃச்காட் (Fort Scot) என்ற ஊருக்கு அந்தத் தெருவிலிருந்த ஒரு குடும்பத்தினர் செல்லவிருப்பதை சார்சு அறிந்தான். தன்னையும் அங்குக் கொண்டுபோய் விட்டுவிடுமாறு அவர்களை வேண்டிக் கொண்டான். அவர்களும் இசைந்தனர். மரியா நம்பிக்கையுடனும் அக்கறையுடனும் வழியனுப்பி வைத்தார்.

அவ்வூரை அடைந்த சார்சு, மீண்டும் தனியன் ஆனான். கிடைத்த சிறு வேலைகளைச் செய்துகொண்டு, சிறிய பாழடைந்த அறை ஒன்றைக் கிழமைக்கு ஒரு தாலர் வாடகை பேசி அமர்த்திக் கொண்டான். பள்ளி முற்பகலில் மட்டுமே நடந்தது. எஞ்சிய பகற்பொழுதில் அறையில் அமர்ந்து பள்ளிப் பாடங்களைப் படித்து முடிப்பான்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஏராளமாய்ப் பொன் கிடைத்ததனால் பொன்னாலேயே காசடிக்கப் பட்டது. அதனால் காசிற்கு மட்டுமன்றி, தாது (உலோக) வகைகட்கும் பொன் என்பது பொதுப் பெயராயிற்று. வெண்பொன் — வெள்ளி, செம்பொன் — செம்பு. கரும்பொன் — இரும்பு, பொன் — தாது (Metal). இதனால் தமிழகத்தில் இருப்புக் காலத்திற்கு முன் பொற்காலம் ஒன்று இருந்ததோ என ஐயம் எழுகின்றது. (தொடரும்)

இரவிலோ மெழுகுத் திரியின் மங்கலான ஒளியில் நெடுநேரம் அமர்ந்து கையிற் கிடைத்த வேறு நூற்கள், அறிக்கைகள், துண்டு வெளியீடுகள், பழைய செய்தித் தாட்கள் எல்லாவற்றையும் படித்துத் தீர்ப்பான்.

ஒருநாள் குலை நடுங்கும் கொடிய நிகழ்ச்சி ஒன்று அங்கு நடந்தது. நிறவெறி பிடித்த வெள்ளையர் கும்பல் ஒன்று ஊர் நடுவில் அரங்கத்தில் பெரிய நெருப்பு மூட்டிச் சிறையிலிருந்து ஒரு நீகிரோவை இழுத்துக்கொண்டு வந்து அவன் மேல் எண்ணெய் ஊற்றி எரியும் நெருப்பில் அவனைத் தூக்கி எறிந்தது. இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற சார்சு அச்சத்தால் நடுநடுங்கினான். அன்றிரவே தன் மூட்டையைச் சுருட்டிக்கொண்டு அவ்வூரை விட்டு அகன்றான். எங்குச் செல்வது என அறியாமல் கான்சாசு மாநிலத்தின் மேற்குப் பகுதி முழுவதும் சுற்றித் திரிந்தான். மறுநாள் எப்படிக் கழியப் போகின்றது என்ற நினைப்பே அவனுக்கில்லை. அவன் நினைப்பெல்லாம் ஒன்றுதான். எப்படியோ ஒவ்வோராண்டும் ஒவ்வொருவகுப்பை முடித்தாக வேண்டும். எத்தனை ஊர் சுற்ற வேண்டியிருந்தாலும் சரியே, எத்தனைப் பள்ளிகளிற் சேரவேண்டியிருந்தாலும் சரியே, அவன் அலையாத அலைச்சல் இல்லை; படாத துன்பம் இல்லை; உணராத பசி நேரம் இல்லை; செய்யாத வேலை இல்லை. சமையல் செய்தான்; விறகு வெட்டினான்; தோட்டவேலை செய்தான்; சாய்க்கடை தோண்டினான்; ஆணி யடித்தான்; வெள்ளையடித்தான்; பெருக்கினான்; கழுவினான்; இரவெல்லாம் வைக்கோல் போர்களிலும் இடிந்த வீடுகளிலும் படுத்தெழுந்தான். ஆனால் ஒன்று; எங்குப் படுத்திருந்தாலும், வழக்கம்போல் வைகறை நான்கு மணிக்கே எழுந்திருந்து இறைவனின் பூந்தோட்டமாகிய காடுகளிலும் குன்றுகளிலும் உலவி மலர்களோடும் செடிகளோடும் உறவாடுவதை மட்டும் அவன் தவிர்க்கவேயில்லை. வண்டல் மண்ணின் கருமையும் செம்மண் நிலத்தின் செம்மையும் குன்றோரம் இலகும் இளநீல ஒளியும் அவன் விழிக்கும் மூளைக்கும் விருந்தாயின. ஆ! ஒளிரும் இந்தவண்ணங்களை யெல்லாம் இவற்றினின்று பெயர்த்தெடுக்க முடிந்தால் இதுவரை எவரும் தீட்டியிராத சிறந்த வண்ண ஓவியங்களை நான் படைப்பேனே என்று ஏங்கினான்.

பத்தாண்டுகள் இவ்வாறு அலைச்சலில் கழிந்தன. அவ்வாறு கழிந்தநாட்களில் குறிப்பிடத் தக்கவை, கான்சாசு மாநிலத்தில் 'ஓலேத்' எனுமூரில் கிறித்தோபர் செய்மூர் எனும் நீகிரோவரின் இல்லத்தில்

சார்சுக்கு இடம் கிடைத்தமையாகும். கிறித்தவ சமயத்தில் கார்வருக்கு ஆழ்ந்த பற்று ஏற்பட்டதும் அவ்வீட்டில் இருந்த பொழுதுதான். ஆயினும் அவனின் சமயம் குறுகிய உட்பூசல்கட்கு ஆட்பட்ட போலி உணர்வாக இல்லாமல் வேறுபாடு கடந்து நின்ற மெய்யுணர்வாகவே இருந்தது. 1880-இல் செய்மூரின் குடும்பம் மினிபா பொலிசு நகரத்துக்குச் சென்ற பொழுது சார்சும் உடன் சென்ருன். அங்கு அவன் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தான். அப்பொழுதுதான் அவன் பெயர் சார்சு வாசிங்டன் கார்வர் என மாறியது. சார்சு கார்வர் எனும் பெயருடையார் மற்றொருவர் அவ்வூரில் இருந்ததால் வேறுபாடு தெரிவதற்காக இம் மாற்றத்தினைச் செய்து கொண்டான். அதோடு பெருந் தலைவரான வாசிங்டனின் நினைவாகவும் இருக்கட்டுமே என்று கருதினுன்.

பள்ளியிறுதி வகுப்பு முடியும் தறுவாயில், சார்சு கான்சாசில் ஐலந்து (High land) எனும் சிறிய கல்லூரி ஒன்றில் மேற்படிப்புக்காக வேண்டுகோள் விடுத்திருந்தான். மதிப்பெண்கள் நிறைவளிப்பதாகவும், கல்லூரி திறக்கும்பொழுது வந்து சேர்ந்து கொள்ளலாம் என்றும் விடை வந்தது. மகிழ்ச்சிக் கடலில் மிதந்தான் இளைஞன். கடந்த நாட்களில் பல பள்ளிகளில் அவனுக்கு இடமளிக்க மறுக்கப்பட்டிருக்கின்றது. கல்லூரியிலாவது இடம் கிடைக்கப் போகின்றதே என்று மகிழ்ந்தான். கல்லூரி திறக்கச் சில நாட்கள் இருந்தன. தன் அண்ணன் 'சிம்' அம்மை நோயால் வெளியூர் ஒன்றில், நெடுநாள் முன்பே இறந்து போன செய்தி அப்பொழுதுதான் தெரியவந்தது. துன்ப அழுத்தத்தோடு அவன் கல்லறையைச் சென்று கண்டான். பின்பு ஊருக்குப் புறப்பட்டு வாட்கின் வீட்டாரையும் தன்னை வளர்த்த கார்வர் குடும்பத்தாரையும் சென்று கண்டான். பழைய நினைவுகளில் சில நாட்களைக் கழித்தான்.

கல்லூரி திறக்கும் நாள் வந்தது. ஆர்வத் துடிப்போடு கல்லூரித் தலைவர் முன் போய் நின்ருன் சார்சு கார்வர். தலைவர் ஒரு சமயத் தலைவர். ஆயினும் கார்வரைக் கண்டதும் அவர் முகத்தில் வெறுப்பு நிழலாடியது. "என்ன செய்தி?" என்ருர். "என்பெயர் சார்சு கார்வர்; கல்லூரியில் இடம் தருவதாக எழுதியிருந்தீர்கள்" என்ருன். "ஏதோ தவறுதலாகக் கூறப்பட்டு விட்டது" என்ருர் தலைவர். "நீங்கள் தாமே எழுதினீர்கள்" என்ருன் கார்வர். "ஆமாம், நான்தான் எழுதினேன். நீ நீகிரோ என்று முதலில் தெரிவிக்கவில்லையே..., இக்கல்லூரி

வெள்ளையர்க்கு மட்டும் தான். உனக்கு இடம் இல்லை'' என்றார் கிறித்து பெருமானின் அவ் வரும்பெருந் தொண்டர். சார்சு அமைதியாக வெளியேறினான். இழிவுணர்வும் துன்பமும் அவன் உள்ளத்தை அழுத்தின.

மீண்டும் தனிமை; நிறவெறியர்களின் நடத்தையால் ஏற்பட்ட நெஞ்சப் புண்... வாட்டியெடுக்கும் வறுமை. ஆயினும் மாறாக் குறிக்கோள். என்ன செய்வான் இளைஞன்? மறுநாள் ஒரு பழத்தோட்டத்தில் வேலை கிடைத்தது. அங்கிருக்கும் பொழுதுதான், கான்சாசின் ஒரு மூலையில் பயிர் செய்ய விரும்பிக் கேட்பவருக்குப் புறம்போக்கு நிலத்தினை அரசினர் இலவசமாக வழங்குவதாகக் கேள்வியுற்றான். எங்காவது ஓடி ஒளிந்துகொள்ள வேண்டும் போலிருந்தது கார்வருக்கு. கனவுகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு அங்குச் சென்றான். 160 குறுக்கம் (ஏக்கர்) பரப்புடைய நிலப்பகுதியைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான். தனக்கென அங்கு ஒரு சிறு மண் வீடு கட்டிக் கொண்டு உழைக்கலாயினான். நிலமோ வறண்ட களர் நிலம். பகலில் கொடிய வெயிலும் இரவில் கடுங்குளிரும் குளிர்காலத்தில் உறை பனிப் புயலும் வீசும் பகுதி அது. இரண்டாண்டுகள் அவற்றோடு போராடினான். சோர்ந்த உள்ளம் உழைப்பில் ஈடுபட்டுத் துன்பத்தை மறந்தது. படிப்படியாக ஆறுதல் அடைந்து மீண்டும் நூற்களைப் படிக்கவும், ஓவியம் வரையவும் தொடங்கினான். கடுங் குளிர்காலத்தில் அந்த வறண்ட நிலத்தின் நடுவிலும் கார்வரின் வீட்டைச் சுற்றி அழகிய மலர்ச் செடிகள் அனைவரும் வியக்கும் வண்ணம் பூத்துச் சொரிந்தன. அம்மலர்ச் செடிகளைப் போலவே கார்வரின் உள்ளமும் மீண்டும் துளிர்த்தது. இனியும் இவ்வாறு ஒளிந்து வாழ்வதில் பயனில்லை என்று உணர்ந்தான். அகவையோ முப்பதுக்கு மேல் ஆகிவிட்டது. தன் குறிக்கோள் நிறைவேறுவது எந்நாள்? நிலத்தை அடைமானத்தில் வைத்துவிட்டுக் கிழக்குத் திசை நோக்கி நடக்கலாயினான்.

விண்டர்செட்டு எனுமூரில் வெள்ளையர்களாகிய மில் ஆலந்து குடும்பத்தினருடன் கார்வருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அஃது இனிய நட்பாகக் கனிந்தது. மில் ஆலந்து அம்மையார் கார்வருக்கு இசை பயிற்றுவித்தார். 'பியானோ' எனப்படும் துருத்தியத்தை மீட்டுவதிலும் கார்வருக்குப் பயிற்சியளித்தார். கார்வருக்கு இளமையில் இருந்த திக்குவாய் எப்பொழுதோ, எப்படியோ நீங்கிவிட்டிருந்தது. குரலும் இசைக்கேற்றதாகக் கணீரென்றிருந்தது. இசையும் கார்வரின்

துன்பத்தை ஓரளவு மறக்கச் செய்தது. மில் ஆலந்து குடும்பத்தினர் காட்டிய வேறுபாடற்ற அன்பாலும் நெருக்கத்தாலும் கார்வரின் உள்ளத்தில் வெள்ளையர்பால் ஏற்பட்டிருந்த அச்சமும் கசப்புணர்வும் மாறின. இத்தகைய பண்பு வாய்ந்த வெள்ளையர்கள் இருக்கும் வரை தாம் ஒதுக்கப்பட்டவரல்லர் என்று அவர் உணர்ந்தார். வெறுப் புணர்ச்சியன்று, அறியாமையே நிற வேறுபாட்டுக்குக் காரணம் என்றும், ஆதலின் மாறாகத் தாம் அவர்கள் மேல் கசப்புணர்வு கொள் வதினும் அறியாமையை ஒழிக்கவே பாடுபடவேண்டும் என்றும் அவர் முடிவு கட்டினர்.

மில் ஆலந்து கார்வரின் மேற்படிப்பார்வத்தைத் தூண்டிவிட் டார். உள்ளுணர்வும் அவரை உந்தியது. இந்திய நோலா மாநிலத் தில் உள்ள சிம்சன் கல்லூரி வெள்ளையர்க்கே உரியதாயினும் அக் கல்லூரித் தலைவர் விரிந்த நோக்கமுடையவராயிருப்பதால் எப்படியும் கார்வருக்கு இடம் கிடைக்கும் என்று கூறி மில் ஆலந்து குடும்பத் தினர் கார்வரை ஊக்குவித்து அங்கு அனுப்பி வைத்தனர். தயக்கத் தோடு சென்ற கார்வருக்கு எதிர்பாராமல் அங்கு இடம் கிடைத்தது. நெடுநாளைய மனப்புண் ஆறியது. கல்லூரி அருகிலேயே சிறு வீடொன்றை அமர்த்திக்கொண்டு வருவாய்க்காகச் சலவைத் தொழிலை மேற்கொண்டார் கார்வர். அவரின் இனிய பேச்சாலும் நற்பண்பாலும் பலர் கார்வருக்கு நண்பராயினர். கல்லூரியில் மொழியியலும், கணக்கும், ஓவியமும் கார்வர் எடுத்துக் கொண்ட பாடங்களாம். செடி கொடிகள் பற்றிக் கார்வருக்கிருந்த அறிவும் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வந்தது. தாம் இயற்கையில் விரும்பிய செடிகொடிகளையே பெரும்பாலும் கார்வர் ஓவியத்திலும் தீட்டி வந்தார். அத்தகையதோர் ஓவியத்தை ஓவிய ஆசிரியை திருவாட்டி எட்டு கண்டு வியந்தார். செடி ஒட்டு வைக்கும் முறையை அவ்வோவியம் விளக்கியிருந்தது. வேளாண்மைக் கல்லூரி யொன்றில் ஆசிரியராயிருந்த தம் தந்தை யிடம் அவ்வோவியத்தைத் திருவாட்டி எட்டு காட்டினர். கார்வர் வேளாண்மைக் கல்லூரியில் சேர்ந்து பயின்றால் மிகவும் சிறப்பெய்த முடியும் என்று அவர் கூறினர்.

திருவாட்டி எட்டுவின் தூண்டுதல் கார்வரின் பழைய எண்ணங் களைக் கிளறியது. சலிப்புற்று உள்ளம் சோர்ந்து இறுதியாக வருங் காலத்தில் ஓர் ஓவியனாகவாவது வாழ்க்கையைக் கடத்திக் கொள்ளலாம் என்றெண்ணத் தொடங்கியிருந்த நெஞ்சில் மீண்டும் கேள்விக்குறி

தோன்றலாயிற்று. தம் வருங்காலம் என்ன? உலகில் ஆற்ற வேண்டிய பணி என்ன? வாட்கின் அம்மையாரின் சொற்கள் நினைவுக்கு வந்தன. “நீ படித்தால் மட்டும் போதாது; வெளியேறி நம் மினத்தார்க்கும் படிக்கக் கற்றுக்கொடு; உன் அறிவை அவர்கட்கு அள்ளி வழங்கு” என்ற அக்குரல் கார்வரின் உள்ளத்தில் ஒலித்தது. தம் இயற்கை அறிவை வளர்த்துக் கொள்ளும் பயிரியல் கல்வியே தமக்கு உகந்தது என்பதை உணர்ந்தார்.

எட்ஞவின் தந்தையார் உதவியால் ஏம்சுநகர் வேளாண்மைக் கல்லூரியில் இடம் கிடைத்தது. கார்வரின் அறிவு வேட்கையும் கொழுந்து விட்டெரிந்தது. நிலத்திணையியல், விலங்கியல், வேதியல், கணக்கியல், நுண்பூச்சியியல் போன்ற பலபாடங்களையும் கார்வர் கற்கத் தொடங்கினர். தொடக்கத்தில் ‘நீகிரோ’ என்ற முறையில் சற்றுத் தாழ்வாக நடத்தப் பெற்ற பொழுதிலும் நாளடைவில் வேறுபாடு நீங்கி மாணவரும் ஆசிரியரும் அவர்பால் மிக்க அன்புடன் பழகலாயினர். கல்லூரிப் பாடங்களிலும், திறமைக் குரிய நடவடிக்கைகளிலும் கார்வருக்குச் சிறப்பிடம் கிடைத்தது. கார்வரின் ஓவிய ஈடுபாடும் வளர்ந்தது. விடுமுறை நாட்களில் இந்திய நோலாவில் எட்ஞ அம்மையாரின் ஓவிய வகுப்புகளில் கலந்துகொண்டு அவர் வரைந்த வண்ண ஓவியங்கள் பல. கல்லூரியிலிருந்த பொழுது ஆசிரியர், மாணவரின் தூண்டுதலாலும், துணையாலும் கார்வர், மாநில ஓவியக் கண்காட்சியில் கலந்து பரிசுகளும் பெற்றார். உலகத்துச் சிறந்த ஓவியர்களுள் கார்வரும் ஒருவர் என்பதை விளக்குவது போல் இன்றும் பாரிசு நகர ஓவியக் கண்காட்சி ஒன்றில் கார்வரின் வண்ண ஓவியம் ஒன்று தொங்குகின்றது.

1894 ஆம் ஆண்டில் கார்வர் அறிவியல் இளையோன் (பி. எசி.) பட்டம் பெற்றார். பயிர் நுணுக்கத்தில் அவர்க்கிருந்த அறிவு அனைவராலும் வியந்து பாராட்டப்பெற்றது. மாணவப் பருவம் ஒருவாறு முடிந்தது. சற்றும் எதிர்பாரா வகையில் அயோவாப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறை ஒன்றில் துணை ஆய்வாளராக இருக்கும் அரிய வாய்ப்புக் கிட்டியது. அச்சல்லூரி ஆசிரியருள் கார்வரே முதல் நீகிரோ அவர். பூஞ்சணங்கள் பற்றிய சிறப்பு ஆராய்ச்சியைக் கார்வர் நடத்தலாயினர். செடிகளையும் பழங்களையும் பற்றிக் கொள்ளும் பூஞ்சண நோயைத் தடுப்பதற்கு வழி கண்டு பிடித்தார் செடிகட்கு நோய்கள் ஏற்படும் காரணங்களை ஒவ்வொன்றாக ஆராய்ந்து

விளக்கினார். அவர்தம் முடிபுகள் அறிவியலாளரால் வரவேற்றுப் பாராட்டப் பெற்றன. அவர்தம் கருத்துகளே முடிபுகளாகவும் ஏற்றுக் கொள்ளப் பெற்றன. அவர்பெயர் நாடெங்கும் தெரியலாயிற்று. 1896 ஆம் ஆண்டில் கார்வர் வேளாண்மையியலில் முதுகலைப் பட்டம் பெற்றார். உள்ளத்தின் ஏக்கமும், ஏமாற்றமும் நீங்கி அமைதியும் பொருந்திகையும் நிறைந்த வாழ்வு கிட்டியது. வருவாயும் புகழும் நிறைந்த அந்த வாழ்வு மற்றவர்களை உறங்கச் செய்திருக்கும். ஆனால் கார்வரின் உள்ளத்தில் அவ்வாழ்க்கை கேள்விக் குறியையே எழுப் பிற்று. இலக்கக் கணக்கான நீகிரோ மக்கள் பசியாலும், நோயாலும் குமுகாயத் தாழ்த்தத்தாலும் அடியுண்டு வளர்ச்சி குன்றி வாழ்க்கைக் காக ஏங்கிக் கிடக்கும் காட்சி அவர் மனக்கண்ணில் தோன்றியது. அவர்கள் அவ்வாறிருக்கத் தாம் மட்டும் இவ்வாறு அமைதியாய் வாழ் வதா? வேறென்னதான் செய்வது? இடைவிடா உழைப்பாலும் கல்வியாலும் முன்னேறி மிகத்தாழ்நிலையிலிருந்து மிக உயர்நிலைக்கு வந்திருக்கும் தமது இந்த வாழ்க்கை ஒன்றே அவர்கட்கு வழிகாட்டி யாகவும் எடுத்துக் காட்டாகவும் அமையவில்லையா? இதுவே போதுமா? அல்லது தாமும் அவர்களோடு ஒருவராய் நின்று தம் கடின உழைப்பாற் பெற்ற அறிவுச் செல்வத்தையெல்லாம் அவர்கட் கும் அள்ளி வழங்குவதா?

இந்நிலையில்தான் அந்த மடல் வந்தது. நீகிரோ இனத்தலைவ ரான புக்கர் வாசிங்டன் என்பார், தனியொருவராய் நின்று தம்மின மக்களை முன்னேற்ற அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தார். அலபாமா மாநிலத்தில் தசுக்கீசீ (Tuskegee) நகரில் கருப்பர்கட்கென ஒரு கல்லூரியை நிறுவுவதில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். ஆயினும் வெறும் ஏட்டுக் கல்வியும், ஏதோ சில தொழில்களும் அவர் கட்குத் தெரிந்தால் மட்டும் போதாது என அவர் அறிந்திருந்தார். மக்களின் உயிர்நிலையான வேளாண்மைத் தொழில் குன்றி அடிப் படையே பாழ்பட்டுக் கிடந்தது. சரியான உணவு இல்லாமல் மக்கள் வாடிக் கிடந்தனர். இந்த நிலையில் தாம் அளிக்கும் கல்லூரிக் கல்வியை அவர்கள்தம் வாழ்க்கைக்குப் பயனுடையதாக அமைத்தல் வேண்டுமே என்று அவர் தவித்தார். தம்மால் எழுத்தறிவும் வேண்டு மானால் சிறிது தொழிலறிவும் புகட்டல் முடியும். ஆனால் நடைமுறை வேளாண்மை அறிவை அவர்கட்குப் புகட்ட யாராவது முன்வரு வாரா? அவர், கார்வரைப் பற்றிக் கேள்வியுற்றார்; எனவே ஒரு மடல் எழுதினார். அதைத்தான் தொடக்கத்தில் கண்டோம். (தொடரும்)

பாரதிதாசன் பத்து.

— துரை மாணிக்கம்.

பூக்கும் பொழிலுட்
　　புகுந்திதழ் நீக்கிப் புதுநறவம்
தேக்கும் பொறியுடல்
　　தும்பீ! எமக்குத் தெரிந்துரைப்பாய்!
தூக்கும் தமிழ்ப்பொழில்
　　பாரதி தாசன் தருசுவை தீம்
பா'க்கும் உயர்ந்த
　　பனிமலர்த் தேறல் பயின்றதுவே! 1

பயில்வண் டயின்ற
　　பசுந்தேன் இலைபடு பாசடை சூழ்ந்
தயில் மண் டொளிர்தா
　　மரையே! உயர்வே தறிந்துரைப்பாய்:
மயல்கொண் டிலங்குயர்
　　பாரதி தாசன் மணித்தமிழோ?
வெயில்கண் டுவக்கும்
　　வெறிமலர்த் தேனோ? விளங்கிடவே! 2

வெறித்த குரலெடுத்
　　தின்னிசை வல்லவர் வெள்கிடயான்
குறித்த தமிழ்ப்பா
　　கொழிக்கும் குயிலே! குரைகடலும்
தெறித்த அலைக்கை
　　ஒலித்துவந் தேற்கும் தமிழ்த்திறமை
பொறித்த புலவனெம்
　　பாரதி தாசன்சீர் பாடுவையே! 3

பாடுங் குயிலின்
　　பழகின் னிசைக்கொரு பண்தவறு
தாடுங் கடிமயி
　　லே, அயர் வுற்றோர் அகங்குளிரத்
தேடுங் கவின்பா
　　முழக்கிடும் பாரதி தாசனவன்
நீடும் இசைமழைக்
　　காடுவை யோநெடுங் காலெடுத்தே? 4

எடுத்த நெடுமா
மலையில் எழுந்தே எழில்மலர்மேல்
படுத்த மணம்புணர்ந்
தின்சுனைத் தண்ணீர் பயின்றுடலங்
கடுத்த நிலைதவிர்
தென்றலே! பாரதி தாசனிசை
மடுத்த செவிக்குள்
அவன்புகழ் பாடி மலர்த்துவையே! 5

மன்னும் பெரும்பெயர்ப்
பாரதி தாசன் மணித்தமிழைத்
தின்னுங் கிளியே!
தனித்தேன் தினைமா தினக்கொடுப்பேன்;
மின்னும் படியுயிர்
மீளும் படியவன் மேம்பெயரை
இன்னும் ஒருமுறை
சொல்லா யோசெவி இன்புறவே! 6

இழைத்த கொடுமையொன்
றில்லா திருக்க எனைச்சுடுவாய்,
மழைத்த முகில்வந்
தெழில்மறைக் காத மணிநிலவே!
தழைத்த பெரும்புகழ்ப்
பாரதி தாசன் தனிப்புலமை
குழைத்த தமிழ்போல்
குளிர்பொழி வாயோ குலமகட்கே? 7

ஆர்த்த கழகத்
தருந்தமிழ் மீதே அழிபகைவர்
போர்த்த பழியிருள்
நீக்க வெழுந்த பரிதியெனும்
கூர்த்த மதிதிகழ்
பாரதி தாசன் கொழுந்தமிழ் போல்
சீர்த்தி நினக்கிலை
யே,கடல் சீர்த்தெழு செங்கதிரே! 8

கதிர்முன் பனியாய்க்
    கனல்முன் பொறியாய்க் கனித்தமிழின்
முதிர்தீஞ் சுவைதரு
    பாரதி தாசன் முழுப்புலமை
எதிர்முன் னிழிபடப்
    பாடல் எழுதி இடர்ப்பட்டோர்
அதிர்வுற லுண்டுளம்
    அஞ்சலு முண்டே அலமரவே! 9

அலங்கலை ஆழ்கடல்
    சூழ்ந்த வியன்பொழில் ஆர்புதுவை
இலங்குயர் சீர்மிகு
    பாரதி தாசன் எழில் மனத்தே
குலுங்கினள் செந்தமிழ்க்
    கன்னி; குயிலெனக் கூவியுயிர்
துலங்கினள்; எந்தமிழ்
    எங்கணும் பூக்கத் துணைசெயவே! 10

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7–25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா
,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

இலக்கியத் திறனாய்வாளர்

— புலவர் தி. நா. அறிவுஒளி —

இலக்கியத் திறனாய்வு ஓர் அருங்கலையாம். நடுநிலையும் நேர்மையும் உண்மையும் அடிப்படையாகக் கொண்டு உருவாகி விளையும் சுவைக் கோவில் அது. ஆயின், நம் நாட்டில் இத்திறனாய்வுக் கலை சீரிய முறையில் வளராததேன் என்பதை எண்ணவேண்டியுள்ளது. நம் நாட்டுத் திறனாய்வாளர் பலர் உண்மைத் திறனாய்வு எழுத இயலாமைக்குக் கீழ்க்கண்டவை காரணங்களாம் :

1. மேனாட்டுத் திறனாய்வு நூல்களைக் கற்றுப்பின், அதையே உறுதியாகப்பற்றி எழுத முற்பட்டமை. 2. தமிழிலக்கியப் பழமை, மரபு, இலக்கணம், மொழி வரலாறு, பண்பாடு, வரலாறு, ஆகியவற்றை ஆராய்ந்து தெளிந்துணராமல் எழுதுகின்றமை. 3. ஆங்கிலம், வடமொழி, பிறமொழிப் பட்டமேந்தியவர்கள், பின் தமிழை ஓரளவு கற்று, அம்மொழிவழிப் பார்வையால் தமிழை அளந்தெழுதுகின்றமை. 4. தமிழிலக்கியப் பரப்பில் குறித்த சில நூல்களை மட்டுமே ஈடுபாட்டோடு ஓதித் தெளிந்து அவற்றையே தம் முழு உலகமாக ஆக்கிக்கொண்டோரின் சுருங்கிய உள்ளத்தினின்று பிறந்த கருத்துகளைக் கொட்டுகின்றமை. 5. கழகத் தமிழிலக்கியங்கள், தொல்காப்பியம், பதினெண்கீழ்க்கணக்குகளில் ஆழ்ந்த நுண்ணிய கூரிய புலமை பெறாமை. 6. தமிழினம், தமிழகம், தமிழ் மரபு, தமிழ்ப் பண்பு, தமிழறம், தமிழ் ஒழுகலாறு, தமிழின வரலாறு என்றிவற்றை அகமார உணர்ந்தொழுகாமல் எழுதுகின்றமை. 7. தமிழைத் தவிரப் பிறமொழிகளையோ, பிறமொழி இலக்கண - இலக்கியங்களையோ, மரபுகளையோ நன்கு அறியாதார் குறுகிய வட்டத்திலிருந்துகொண்டு எழுதுகின்றமை. 8. கட்சிகள், குழுச் சிறைகள், சமயச் சார்புகள், நிலையங்கள், அரசுத் துறைப் பிடிப்பு, காலச் சூழ்நிலையின் அடிமைத் தன்மை ஆகியவற்றிற்கு இரையானவர்கள், அந்தந்த நிலை - எல்லைக்குள்ளிருந்து திறனாய்வெழுதுகின்றமை. 9. பழமை இலக்கியங்களைப் போன்றே புதுமை இலக்கியங்களையும் ஒப்ப மதித்து ஆராயும் ஆற்றலில்லாதார் எழுதுகின்றமை. 10. அடிவயிற்றுக்கு வாழ்வை அடைமானம் வைத்துக் காசுக்கேற்றபடி கருத்தை விற்பனை செய்வோர் எழுதுகின்றமை.

இப் பத்து வகைகளையும் கடந்து நின்று இலக்கியத் திறனாய்வு செய்த நல்லறிஞர் சிலர் உள்ளனர் என்பதையும் நாம் நினைவு கூர வேண்டும்.

தம் விருப்பு வெறுப்பையே திறனாய்வின் அளவு கோலாகக் கொண்டு திறனாய்வது, மெய்த்திறனாய்வன்று. இம் மருளாளர் உண்மையை எஞ்ஞான்றும் உணரார். எதையும் குழப்புவதும், திட்டவட்டமின்றிக் கூறுவதும், சிலரைப் புகழ்வதும், பிறரைத் தள்ளுவதும், தம் நண்பர் இனத்தினரைப் படைப்பிலக்கியத் திறமையாளர் என ஏற்பதும், மேனாட்டு இலக்கியமே இலக்கியம், நம் நாட்டில் இலக்கியத்தையே யாரும் புரிந்து கொள்ளவில்லை என்பதும் 'திறனாய்வே' அன்று! அறிவின் வளர்ச்சிக் கேற்பவும், அடைவின் புதுப் புது வாழ்வுணர்வுக் கேற்பவும் பலகோண, பலநிலை, பல மரபு, பல நோக்கு, பல மொழி இலக்கிய வளத்தை ஆராய்ந்தறியும் தெளிவுக் கேற்பவும் திறனாய்வு, திறனாய்வு முறை, திறனாய்வுக் கொள்கை, தீர்ப்பு மாறுதலடையும். நமக்கு விருப்பமானது, பிறர்க்கு வெறுப் பூட்டலாம்; நாம் வெறுப்பதைப் பிறர் விரும்பலாம். ஆயின், இந் நிலையை மீறி உண்மையை உணர்வதும், உணர்த்துவதும் உண்மைத் திறனாய்வாகும். திறனாய்வு ஒவ்வொரு காலகட்டத்திலும் இருந்தே வந்தது. திறனாய்வு முறை, போக்கு, கொள்கை, தீர்ப்பு ஆகியவை பல்வேறு வகைகளில், நெறிகளில் இயல்புகளில் அமைந்திருந்தன. அஃதியல்பே. மக்களுக்குள் வேறுபாடுகள் உள்ளவரை, அன்னார் கருத்துகளிலும், மனப்பான்மைகளிலும் ஒன்றை ஏற்பது - மறுப்பது என்பவற்றிலும் வேறுபாடுகள் இருப்பதியல்பே.

'இலக்கணம்' பண்டைக்கால 'இலக்கிய மொழித் திறனாய்வே'

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புவதே தமிழ் மரபு. தமிழிலக்கணம் மொழியின் இலக்கணம் மட்டுமன்று; இலக்கியத் தினையும், மரபையும், உலக வழக்கையும், வாழ்வையும் திறனாய்ந்து தெளிவிப்பதே தமிழிலக்கணமாம். இலக்கணம்; இருந்ததை - இருப்பதைத் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் விளக்கியும், வரையறை செய்தும், முறைப்படுத்தியும், பொதுமை செய்தும், தனிமைப் படுத்தியும், குறிப்பாலுணர்த்தியும், செறித்துக் காட்டியும், உய்த்துணர வைத்தும் திறனாய்வு செய்ததேயாம்.

பண்டை இலக்கியங்களை இன்றைய மதிப்பீட்டளவையால் அளப்பது செவ்விதன்று. கழக இலக்கியங்கள், திருக்குறள், வேறு சில

நூற்கள் இக்கால அளவீடுகளுக்கும் ஈடு கொடுக்கும் ஆற்றலும் மதிப்பும், தகுதியும் சான்றவையே. அம்மட்டோ! அவை வருங்காலப் புது அளவீடுகளுக்கும் ஈடு கொடுத்தும் வெல்லும் இயற்கையின. பண்டை இலக்கிய ஆய்வு, நம் மொழி மரபு, இலக்கிய - இலக்கண மரபுகளுக்கியையவே அமைய வேண்டும். அஃதின்றி வேறுவகை நோக்குகள் உண்மைக்கு மாறுகப் பொய்ம்மையை விளைத்து மருட்டும் என்பதைத் தமிழர் நன்குணர வேண்டும்.

திறனாய்வு அறுவை மருத்துவத்துக் கிணையானது. மருத்துவம், நோயை நீக்கி ஆளைப் பிழைத்தெழச் செய்வது போல், இலக்கியத்தின் குறை நீக்கி நிறை காட்டி நன்மை செய்வதே திறனாய்வு. எழுதுவ தெல்லாம் இலக்கியமன்றென்பது உண்மையே. அதனால் இலக்கியத் தையும் அன்றெனத் தள்ளுவது திறனாய்வன்று. இலக்கிய வரை யறைக்குரிய இலக்கணம் தெளிவுபடாத போது அவரவர் மனப் பான்மைக் கேற்பவே படைப்பு மதிக்கப் பெறும். 'நல்லிலக்கியம்' 'அல்லிலக்கியம்' என்ற பாகுபாட்டை உணர்வது படிப்போர்க்குரிய கடமையே. அதற்கு ஆழ்ந்த அறிவும் விரிந்தகன்ற நூலாராய்ச்சியும், திறனாய்வு மனப்பான்மையும் வேண்டும். எளிய அறிவினர்பால் இவ் வியல்புகளைத் - திறன்களை - எதிர்பார்க்க வியலாது. அத்தகை யோர்க்கு இலக்கிய உணர்வையும், திறனாய்வுத் திறனையும் உருவாக்க வேண்டும். இதுவும் திறனாய்வாளனின் திருப்பணியேயாம். ஆயின், திறனாய்வாளன் குறுகிய உள்ளத்தினனாக இருப்பானாயின், அவன் எழுத்திலும் குறுகிய நோக்கு படியும்.

இலக்கியம் என்ற பெயரால், இலக்கியமல்லாத சிற்றிலக்கியத் தூறுகளும், பழங்கதைக் குப்பைகளும், குறுநூற் பருக்கைகளும் பிற் காலப் பகுதிகளில் மூடிக்கிடந்தன. வடமொழி, பிறமொழி இருள் மூடி, மெய்த் தமிழிலக்கிய இயல்பை - மரபை மறைத்தும், மறுத்தும் செய்யப்பட்ட கொடுங் கயமைகளைத் திறனாய்வு இன்னமும் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டவில்லை! அரசியல், கட்சி, சமயம், போலித் திறனாய்வுக் கொள்கைகளை வென்று கடந்த உண்மைத் திறனாய்வாளர் சிலர் இந்நுட்பங்களை ஓரளவு ஒளியிட்டுக் காட்டி வந்துள்ளனர்; காட்டி வருகின்றனர் என்பதையும் நாம் இங்குக் குறிப்பிடவேண்டும். தமிழ் நாட்டில் ஒரு சார் எழுத்தாளர், படித்தோர், தமிழின் - தமி ழினத்தின் - தமிழ்ப் பண்பாட்டின் முதன்மை, பழமை, ஒண்மை, வேர்த்தன்மை, தாய்மை, நுண்மை, ஆகியவற்றை ஏற்பதில் மிகப்பிற்

போக்கான மனப்பான்மையுடையவர்களா யிருந்திருக்கின்றனர்; இன்றும் அம்மனப்பான்மையினின்று அன்னார் விடுபடவில்லை. இவர்களால் திறனாய்வு செய்ய இயலுமா? ஆயின் அவர்களே திறனாய்வு செய்யக் கிளம்பிவிட்டனர். இந்நிலையில், இவர்கள் கூற்று பொய்யாய், அடைவதை எவ்வாறு சுட்டிக் காட்டாமலிருக்க முடியும்? நடுநிலை நேர்மை, உண்மை, அறம் என்பவற்றை வாயாலும் எழுத்தாலும் மட்டும் வாழ வைத்துச் செயலில் - கொள்கையில் - நம்பாமல் - போற்றாமல் ஒழுகுவோர் உண்மைத் திறனாய்வாளராதல் ஒல்லுமா? குறையை மறைப்பதும் மறுப்பதும் எவ்வாறு நேர்மையில்லையோ, அதே போலச் சிறப்பை மறைப்பதும் மறுப்பதும் அறக்கேடான செயலே.

பிறமொழிக்கு மனத்தை அடிமையாக்கிய பின் தமிழைத் திறனாய்தல் முறையற்றது; அறக்கேடானது. தமிழைத் தமிழ்க் கண்ணோக்கில் மட்டுமே ஆராயவேண்டும். ஒப்பீட்டாய்வு வேறு; திறனாய்வு வேறு; பலர் வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாமல் மருள்கின்றனர்! பண்டை இலக்கியங்கள் 'படைப்புக்' கென்றே ஆக்கப்பட்டன. நம் திறனாய்வுக்குள் அதை அடக்க நாம் முயல்கிறோம். இதனை நாம் நினைவில் நன்கு பதித்துக் கொள்ளவேண்டும். இன்றைய நோக்கும், அன்றைய நோக்கும் பல சூழல்களால், நிலைகளால், இயல்புகளால், பல முன்னேற்றங்களால் மாறுபட்டவை. இத்தெளிவோடு உண்மை காணும் ஆய்வு மனம் நம் திறனாய்வாளர்க்கு இன்றியமையாததாம். புதுத் தமிழ் நூல்களை ஆராயும்பொழுது மிக்க விழிப்பு வேண்டியுள்ளது. இன்று நாட்டில் செயற்கைப் புகழும் 'தூக்கிவிடப் பட்டோரின்' செல்வாக்கும் 'கொடிகட்டிப்' பறக்கிறது! ஆளைப்பார்த்து எழுத்தை மதிக்கும் மனநிலை வளர்ந்துள்ளது. எழுத்துக்காகவே எழுத்தை மதிப்பீடு செய்யும் அகநிலை வளரவேண்டும்.

பாரதிதாசனைப் பாவலராகக் கொள்ளவும் 'தொடை நடுங்கும்' 'மறவர் மணிகள்' நந்தமிழ் நாட்டில் நாணத்தக்க நிலையில் உயிர்வாழவில்லையா? தமிழ் மேதை மறைமலையடிகளின் தமிழைப் புரிந்து கொள்ள வியலாத பேதைப் பேடியர் இல்லையா? பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் குடியரசு, புரட்சி, பகுத்தறிவு, விடுதலை முதலிய இதழ்களை ஆசிரியராக இருந்து பல ஆண்டுகள் நடத்தியவர் என்பதை நாடறியும். இவரை ஓர் 'இதழாசிரியர்' என்று குறிப்பிடவும் கூசும் திறனாய்வாளர் மணிகள் இல்லையா? (பெரியாரின் கொள்கை, கட்சி, போக்கு பற்றிய பேச்சு எனக்கு இன்றியமையாததன்று. அவர்

ஓர் எழுத்தாளர், இதழாசிரியர் என்ற உண்மை மட்டுமே இவண் கருதற்குரியது.) இவர்களை நேர்மையான திறனாய்வாளர்கள் என்று கூற முடியுமா? கொள்கைகள், கருத்துகளைக் கண்டே அஞ்சும் கோழையர் அறிவுச் செம்மாப்புக் குறியராக முடியாது. திறனாய்வாளன் அறிவுச் செம்மாப்பில்தான் தன் கலையைப் படைக்கிறான்!

பெரும்பாலான மக்கள் பாராட்டுவது மட்டுமே இலக்கியம் என்பதோ, சிறு பாலோரான படித்தோர் போற்றுவது மட்டுமே இலக்கியம் என்பதோ நேரிய தீர்ப்பன்று. காலம் தீர்ப்பளிக்க வேண்டியதை மக்களோ, மக்களின் கருத்து தீர்ப்பளிக்க வேண்டியதைக் காலமோ தீர்ப்பளித்து விட முடியாது. போலிகளை, 'நல்ல' தென்பதும், நல்லதைக் கண்டுங் காணாமலே ஒதுக்கி விடுவதும் இலக்கியத் துறைக் கயமை என்பேன். மக்களுக்குப் புதுமையைப், புரட்சியை, அறிவு மனப்பான்மையை, நல்லுணர்வாக்கத்தை, புத்துலக வாழ்வை, வளமார் இலக்கிய மரபை வளர்க்கவேண்டியவர்கள் உண்மைத்திறனாய்வாளர்களே யாவர். தனித்தமிழ் மரபு உண்மை ஆக்க மரபு என்பதையும், தமிழின வரலாற்றுச் சீரார் வாழ்வினை விளக்கும் உண்மைத் தமிழிலக்கியத்தின் ஒட்பம் காட்டும் திறனாய்வே சீரிய கலை என்பதையும், குறுகிய எல்லைகளைக் கடந்த விரிந்து பரந்த நோக்குடைய ஆராய்ச்சி யாக்கங்களே தமிழர் அறிவு ஓம்பும் படைப்புகள் என்பதையும் தமிழர் தெளிய வேண்டும். *

அன்பர்களுக்கு

தென்மொழி அச்சகத்திற்கு அரசினர் இசைவு கிடைத்து, இனி வரும் இதழ்கள் நம் அச்சகத்திலேயே அடிக்கப் பெறுமாதலால், கடந்த இரண்டொரு மாதங்களாக ஏற்பட்டு வரும் வெளியீட்டுச் சுணக்கம் இனி ஏற்படாதென மகிழ்வுடன் அறிவிக்கின்றோம்.

— அமைச்சர்

முகவர்கள் கவனிக்க

(1) முகவர்களுக்கு விடுக்கப் பெறும் படிகள் யாவும் சரிபார்த்தே விடுக்கப் பெறுவதால் இடையில் நேரும் தவறுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.

(2) முகவர்கள் தாங்கள் விடுக்கும் பணவிடைகளையும், பதிவஞ்சல்களையும் தனிப்பட்ட யார் பெயருக்கும் விடுக்காமல் அமைச்சர் தென்மொழி என முகவரியிட்டே விடுக்க வேண்டுகின்றோம்.

திருக்குறள் இறைவன் வணக்கம்

ஆசிரியர் : ப. மாப்பிள்ளையன்.

கிடைக்குமிடம் : திருக்குறள் ஆய்வுக் கூடம், பட்டுக்கோட்டை.

விலை : உருபா 1—00.

திருக்குறளுக்கு இதுவரை எத்தனையோ உரைகள் வரையப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலன நூலாசிரியரின் கருத்தைத் தெரிந்து கொள்ளச் செய்யும் முயற்சியினும் தாம் விரும்பும் கருத்தைத் திருக்குறள் மேலேற்றச் செய்யும் முயற்சியே மிகுதி. எனவே, அவை நூலாசிரியரின் உள்ளத்தை அணுகவும் முடியாதன வாயும், யானை கண்ட குருடர்தம் கூற்றுகள் போல் நிறைவில்லாதனவாயும் இருக்கின்றன. அவ்வகையில் 'திருக்குறள் இறைவன் வணக்கம்' என்னும் இந்நூலும் ஒன்ருகும்.

இந்நூலை யெழுதியவர் தமக்கென ஒரு வட்டத்தை வரைந்து வைத்துக்கொண்டு அதற்குள் திருவள்ளுவரை வலிந்து இழுத்துவர முயன்றுள்ளார்.

ஆதிபகவன் என்னுஞ் சொற்கள் ஆதிப்பகவன் என வலிமிகுந்து நிற்றல் வேண்டுமெனக் கருதிச் சான்றுகள் காட்டி வலியுறுத்துகின்ருர். அவர் காட்டும் சான்றுகள் யாவும் தமிழ்ச் சொற்களின் புணர்ச்சிக்கு மட்டுமே பொருந்துவனவாம். வடசொல்லுந் தமிழ்ச் சொல்லும் புணருங்கால் அவ்வரையறை செல்லாது. இவ்வடிப் படையை அவர் கவனியாது போனது, தாங்கொண்ட கருத்திற்கு நூலாசிரியரை உட்படுத்தும் முயற்சி பற்றியே!

'கடவுள் வாழ்த்தில்' கூறப்படும் பகவன், அறிவன் முதலிய சொற்கள் மக்களுள் ஒருவனையே சுட்டுகின்றன வென்றும், அவன் மன்னவனே யென்றும் கருதுகின்ருர். இறைமைத் தன்மைகளை

யேற்ற பெரியார்தம் சிறப்பும், அவர்வழியே உலகம் இயங்கற் பாற் றென்பதும் 'நீத்தார் பெருமையில்' கூறப்பட்டிருப்பதனையும், அதன் முன் இயற்கை நிகழ்ச்சியாகிய வான் சிறப்பும், அதன்முன் கடவுள் வாழ்த்தும் அமைந்திருப்பதனையும், பொருட்பாலின் முதலதிகாரம் 'மன்னன் சிறப்பு' கூறுகின்றதனையும் ஆழ்ந்து நோக்காது எழுது வது, அவ்விரு சொற்களும் அரசனையே.குறிப்பன வென்று மயங்கி யுரைக்கக் காரணமாயிற்று.

திருக்குறளுக்கு அதிகாரத் தலைப்புப் பெயராக அமைந்தன வெல்லாம் அவ்வத் தலைப்பினுள் வந்த சொற்களைக்கொண்டே அமைந்தனவாகுமென்று கூறுவதும், அதற்குக் கரியாக வான் சிறப்பு நீத்தார் பெருமையென்னும் அதிகாரங்களைக் காட்டுவதும் பொருந்தா. ஏனெனின் நலம் புனைந்துரைத்தல், படர் மெலிந்திரங்கல் முதலிய அதிகாரங்கட்கு அவ்வாறு அமையாமை காண்க!

'மாண்பானுல்' 'மற்றையவர்கள்' முதலிய சொல்லாட்சி களும், கள்ளுண்ணுமை, வரைவின் மகளிர் முதலிய பொருளாட்சி களும், பிறவும் திருக்குறளுக்கும், கழக இலக்கியங்கட்கும் வேறுபாடு உடைமை பற்றி அவை தவறெனல் பொருந்துமோ? பொருந்தா திருக்கக் கடவுள் வாழ்த்து கழக இலக்கியங்களில் இல்லையென்று கூறித் திருக்குறளுக்கும் இருத்தலாகா தென்னல் ஏலாது: கழக இலக் கியங்கள் பெரும்பாலும் தனியொரு நூலாசிரியரால் எழுதப் பெற்ற நூற்களல்ல. அவை தொகை நூற்கள். அவற்றினுங்கூடக் கடவுள் வாழ்த்துகள் தொகுப்பாளராற் பாடப் பெற்றுள்ளன.

'வகுத்தான் — வகுத்தற்றொழிலையுடைய மன்னவன்' என்று கூறுதல் அவ்வதிகாரத்து ஏனைக் குறட்பாக்களையும் நோக்காது செய்துகொண்ட முடிபாகும்.

வாலறிவன் என்பதற்குத் தூய அறிவினன் என்ற உரையைக் கைவிட்டு, நுண்ணறிவன் என்றும், மூத்த அறிவுடையான் என்றும், கூறுதல் யாது பயன் கருதியோ?

திரு. தண்டபாணியார் அவர்கட்குப் பின்னுள்ள தேசிகர் என்ப தனை அடைப்புக் குறிக்குள் எழுதியவாறே திரு. கா. சுப்பிரமணி யருக்குப் பிள்ளையையும், பின்னத்தூர் திரு. நாராயணசாமி அவர்கட்கு ஐயரையும், திரு. நமச்சிவாயம் அவர்கட்கு முதலியாரையும் அடைப்புக் குறிக்குள் எழுதாதது மறதியாற் போலும்!

மொழிநடை பிறமொழிக் கலப்பில்லாததாய் இருப்பது மகிழ்வூட்டுவதாயும், வரவேற்கத் தக்கதாயும் இருக்கின்றது. உலகமெல்லாம் ஒப்பத் தகுந்ததாய ஓர் உயர் நூலுக்கு இத்தகைய ஆய்வுரைகளும், கருத்துரைகளும் எழும்பல் நல்லதே! அம்முறையில் இந்நூல் வரவேற்கத் தக்கதே! ஆயின் இதன் முடிவு இனி வருகின்ற அறிவுணர்வின் கொடுமுடியைப் பொறுத்ததாகுமேயன்றி, நம் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைப் பொறுத்ததாக இருத்தல் கூடாது.

— இறைக்குருவன்

கடிதக் கனிகள்.

தொகுப்பாளர் : தமிழ் ஊழியன்,

கிடைக்குமிடம் : சி. பி. எசு. புத்தக நிலையம்,
அண்ணாமலைநகர்.

விலை : உருபா மூன்று.

அன்புள்ள தமிழ் ஊழியனுக்கு,

'கடிதக் கனிகள்' என்னும் நூலைப் பார்த்தோம். நோய்க்குரிய காரணங்களை மருத்துவர் கூறிய பின்பும், நோயாளி அந்நோய் மிகும் வினைப்பாடுகளையே மேலும் மேலும் செய்து வருவானாயின் அஃது எத்துணை இரங்கத் தக்கது! தாங்கள் முன்னர் வெளியிட்ட 'கவிதைக் கனிகள்', 'கட்டுரைக் கனிகள்' என்னும் நூற்களில் உள்ள நோய்களைச் சுட்டிக் காட்டியிருப்பவும், அவற்றைத் தவிர்க்க வேண்டியும் எழுதியிருப்ப, அவை மீண்டும் இந்நூலில் உள்ளமை முகஞ்சுழிக்கத் தக்கது. இடித்த கல்லிலேயே மீண்டும் மீண்டும் தன் காலை இடித்துக் கொள்ளும் தன்மையை என்னென்பது ? இற்றை இலக்கிய வாணிகர்களும், அரசியற் பற்றுளாரும் தங்களைத் தாங்களே வெற்றுரையாற் புகழ்ந்து கொள்வதுபோல, அறிவிலும் உணர்விலும் வளரவேண்டிய மாணவர்களை, 'நடமாடும் நூலகம்' என்றும், திக்கித் திக்கிப் பேசித் தப்பும் தவறுமாய் எழுதுபவரை 'இன்பத்தமிழை இனிதுற எழுதுவதில் தனித்திறம் பெற்றுள்ளார்' என்றும், ஒருவரை 'இவர் எப்போதும் வெற்றிலை பாக்கு குதப்புவர்' என்றும் இனையவும் எழுதியிருப்பது எள்ளத் தக்கதும் நகத்தக்கதுமாகும். இத்தகைய வேண்டாத சொற்புனைவுகள் இல்லாது மாணவர்தம் கட்டுரைகளை அவ்வவ்வாறே வெளியிடுவதே முறை! இதைப் பன்முறை சுட்டியும் ஏதங்கொண்டு ஊதியம் போக்கும் நிலைக்கு வருந்துகின்றோம். நூலில் உள்ள

அச்சுப் பிழைகளையும், ஒற்றுப் பிழைகளையும், சொற்றொடர்ப் பிழைகளையும், அயன் மொழி விரவலையும் கூடவா தவிர்த்திருக்கக் கூடாது? செயற்கரிய செய்ய வியலாமற் போயினும் செயற்குரியவற்றையாவது செப்பமாகச் செய்திருத்தல் கூடாதா? இனியேனும் இத்தகைய இலை தழை மிடையலைப் பெரிதும் குறைத்து நறுமலர்த் தொடையலாகத் தொகுத்தளித்துப் படிப்பார்க்கும் வெளியிடுவார்க்கும் பயன் தரும் வகையில் தங்கள் எண்ணங்களை அமைத்துக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு,

தங்கள் 'கடிதக் கனிகளைச்' சுவைத்துச் சோர்ந்த,

பனம்பாரன்.

ஒழுங்கில்லாதவனிடம் என்னடா ஒழுங்கு.........?

பாவேந்தரும் அவருடைய மருமகனும் திருச்சிக்குப் புகை வண்டியில் போய்க்கொண்டிருந்தனர். இவர்கள் ஏறிய பெட்டியில் முதல் வகுப்பில் இரண்டு மெத்தைகளே எதிரெதிராக இருந்தன. ஒன்றில் பாவேந்தர் அமர்ந்து கொண்டார். எதிரில் இருந்ததில் ஒருவர் கால்களை நீட்டியவாறு படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். மருகர் அதில் உட்கார இடமின்றி நின்றுகொண்டிருந்தார். படுத்திருந்தவர் சிறிது விழித்துப் பார்த்துவிட்டு மேலும் கண்களை மூடித் தூங்குபவர் போல் இருந்தார். உடனே மருகர், படுத்திருப்பவரிடம், "ஐயா, எழுந்திருங்கள்; நானும் அமரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அவர் பேசாமலேயே கிடந்தார். மீண்டும் மருகர், "என்னய்யா நான் நிற்கிறேன்; நீ தூங்குகிறாயே!" என்று ஒருமையில் பேசினர். தூங்குபவருக்குச் சினம் வந்துவிட்டது. உடனே படுத்தபடியே கண்களை விழித்து, "ஒழுங்காகப் பேசு ஐயா......" என்று சிறிது உரத்த குரலில் எச்சரித்தார். இவர்களின் போராட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பாவேந்தர் உடனே மிகுந்த சினத்துடன்," ஒழுங்கில்லாதவனிடம் என்னடா, ஒழுங்கு வேண்டிக்கிடக்கு... அவன் எவ்வளவு நேரமா நின்னுகிட்டிருக்கான்! நீ படுத்துகிட்டே எழாம கிடக்கிறே; எழுடா" என்று சீறினர். படுத்திருந்தவரும் எழுந்து கூச்சலிட்டார். சண்டை வலுத்தது. இதற்குள் வண்டி ஒரு நிலையத்தில் வந்து நின்றது. இவர்கள் சண்டையைப் பார்த்த மாணவர்கள் சிலர் அந்த ஆளிடம் தனியாய், "ஐயா, அவர் பாரதிதாசன்; அவரை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர் அப்படித்தான் கண்டிப்பானவர்" என்று அமைதிப் படுத்தினர்கள். பாவேந்தரிடம் சண்டை செய்தவர் விடுமுறையில் வீடுசென்ற தொடர் வண்டித் துறை அதிகாரி ஒருவர்தாம். *



பாவேந்தர் நினைவு மாலை

அறிவுக்குத்தோள்.

புதுவை சுப்பிரமணியன்.

பொறியிருக்கும் மாந்தரிங்குப் புகழ்ந்து பாடும்
புரட்சிப்பா வேந்தன்று தமிழர் நாட்டை
நெறியிருக்கும் பாச்சுவைக்கும் தகுதி யூட்டி
நிலைநிறுத்த வில்லையெனில் நிலைமை என்னாம்?
அறிவிருக்கும் ஆன்றதமிழ் நூற்ப யிற்சி
அமைந்திருக்கும் பாவலருள் பலரும் இந்நாள்
உறியிருக்குங் குடத்திட்ட விளக்காய் அன்றோ
உள்ளஇடந் தெரியாமல் மறைந்தி ருப்பார்!

கேள்கொடுத்தார் இவரயலார் என்றெண் ணாமல்
கெழுதகைமைப் பாவேந்தன் வந்தார்க் கெல்லாந்
தான் கொடுத்து கை கொடுத்துத் தளைகொ டுத்துத்
தமிழ் கொடுத்த சீரெல்லாங் கொடுத்து முன்னை
நாள்கொடுத்த உழைப்பாலே பெற்ற கல்வி
நலங்கொடுத்து நயங்கொடுக்குங் பாட்டி யற்றத்
தோள் கொடுத்துத் தூக்கிவிட் டாலே அன்றோ
துணிந்தின்று பலபுலவர் உலவுகின்றார்!

உரைப்பாட்டு வரைவோர்க்கும் இதழ்கள் தோறும்
ஓவியங்கள் கதைபாடல் தீட்டு வோர்க்கும்
திரைப்பாடல் தருவோர்க்கும் கட்சி தோறும்
திருக்கூட்டம் போல்வளரும் பாவ லர்க்கும்
அரைப்பாடல் எழுதியபின் அதைமு டிக்க
அலமந்து நிற்போர்க்கும் இனும்பி றர்க்கும்
இருப்பான தோளாகித் தாங்கி நிற்க
இருப்பதன்றோ புரட்சிப்பா வேந்தன் பாட்டு!

இலக்கணத்தை மதித்தெழுத அறியா தார்க்கும்
எளியநடைப் பாட்டியற்ற அறியா தார்க்கும்
கலக்கமுறு சேறெருக்கும் வேற்றுச் சொல்லின்
கலப்படத்தைத் தவிர்த்தெழுத அறியா தார்க்கும்
உலைக்களத்துத் துருத்தியைப்போல் பழைய பாட்டை
உரைப்பதன்றி வேறுரைக்க அறியா தார்க்கும்
மலைக்குவட்டுச் சுடரொளிபோல் இருப்ப தன்றோ
மாண்பமைந்த புதுவைப்பா வேந்தன் பாட்டு!

நாள்பட்ட நோயாக மூடக் கொள்கை
நாட்டினிலே வேரூன்றி இருந்த காலை
வாள்பட்ட முனையாக வேர றுக்க
வந்ததன்றோ பாவேந்தன் பாடல்! அன்றேன்,
தாள்பட்ட இடமெலாம் அறிவு கூட்டும்
தமிழ்ப்புலமை பெருகிடவும் அறியா மைதான்
தூள்பட்டுப் போகாதோ? அறிவென் கின்ற
சுடரெழுந்து தோன்றுதோ தமிழன் உய்ய?

இருட்டறையில் இருக்கின்ற உலகத் துக்கே
எழுகின்ற ஞாயிறுபா வேந்தன் பாடல்!
மருட்டுகின்ற அறியாமை மூடர்க் கெல்லாம்
மண்டுமெரி கக்குகின்ற உச்சித் தீயாம்!
தெருட்டுசுவை தேடுகின்ற அறிஞர் கட்கோ
சிரிக்கின்ற அழகு செயும் மாலை வெய்யில்!
குருட்டறிவுப் பாவலர்க்கு வழிது லக்கும்
குத்துவிளக் காம் குடும்ப விளக்கின் பாட்டு!

பழிவழியாம் அறியாமைப் பாதை நீங்கிப்
படரறிவின் மேற்செல்ல வேண்டியோர்க்கு
விழியுளவாம்! அவை எண்ணும் எழுத்தும் என்று
விளக்குகின்றார் வள்ளுவனார் உலகுக் கெல்லாம்!
"மொழிவிழியாம் தமிழர்க்கே!" என்று பாட்டில்
முழங்குகின்றான் பாவேந்தன்! அவன்றன் பாட்டு
வழிவழியாய் வரவிருக்கும் பாவலர்க்கு
வழிகாட்டும் விழியென்றே முழங்கு வேன்யான்!

குடித்தனப்பாங் கறிவிக்கும் ஒருநூல்! நல்ல
கொள்கைகளை அறிவிக்கும் ஒருநூல்! இன்பம்
வடித்த தமிழ் அறிவுதரும் ஒருநூல்! அன்பு
வளர்காதல் அறிவு தரும் ஒருநூல்! நன்றாய்ப்
படித்தவர்க்கும் அறிவு தரும் ஒருநூல்! உண்மைப்
பகுத்தறிவுக் குணவுதரும் ஒருநூல்! இவ்வா
றெடுத்துரைப்பின் புரட்சிப்பா வேந்தன் நூலுள்
எடுத்ததெலாம் அறிவுக்குத் தோள்!தோள்! தோளே!

மடமையினை வெடி வைத்துத் தகர்ப்பார் தோளில்
மறைந்திருந்து பாவேந்தன் பாட்டொ லிக்கும்!
உடைமையினைப் பொதுவாக்க உழைப்பார் தோளில்
ஒளிந்திருந்து பாவேந்தன் பாட்டொ லிக்கும்!
அடிமைவிலங் கறுக்கப் போர் தொடுப்பார் தோளில்
அமர்ந்திருந்து பாவேந்தன் பாட்டொ லிக்கும்!
கடமைகளை விதைத்தூன்றுந் தமிழர் தோளில்
காலத்தை வென்றவன்றன் பாட்டொ லிக்கும்!

கலைமுறைகள் அறிவித்தான்! அரசி யல்போர்க்
கள முறைகள் அறிவித்தான்! நாடு வாழும்
நலமுறைகள் அறிவித்தான்! இதழ்ந டத்தி
நடைமுறைகள் அறிவித்தான்! தமிழைக் காக்கப்
பலமுறைகள் அறிவித்தான்! பழியைத் தீர்க்கும்
படைமுறைகள் அறிவித்தான்! அவன்தான் இந்தத்
தலைமுறையின் பாவேந்தன்! புரட்சி செய்தோன்!
தமிழ்வாழத் தான்வாழ்ந்த தகைமை கொண்டோன்!

குடைக்கீழ்ச் செல்வோம்!

நன்முல்லை, விரியூர்.

நீயே, பாவின் வேந்தா கினையே!
தீயே யனையே திறத்தினை பகைக்கே!
தமிழ்நின் உடலே! பொருள்நின் உயிரே!
தமிழ்க்கிலை அழிவே! நின்வாழ் வனைத்தே!
நின்வாய்ப் பிறந்த தென்றமிழ் முழக்கால்
இன்றெமக் கீந்தது மியாதா மெனினே,
'உள்ளத் துரமும், உடலிற் றிறமும்,
தெள்ளத் தெளிந்த சீரிய நோக்கும்,
தளராப் பெருநடைச் செலவும், வென்றியும்,
வென்றியிற் காண்குறும் வெந்திறல் நாடும்,
நாட்டினை யாளும் நந்தமிழ் மொழியும்,
மொழிமுன் வைத்த மொழிவழி வாழ்வும்
அமைவுற அளித்தனை; பெரும! இனியே!
எடுத்த செலவி னிடைப்பட மாறுப்
படைகொடு நின்றன் உணர்வுக்
குடைக்கீழ்ச் செல்வேம் குலைவிலா தெழுந்தே!

பாவலரேறே!

— இறைக்குருவன்

நினைதொறு நெஞ்சிற் குரமூட் டுவையே!
முனைநாள் நந்தமிழ் மொழியும் நாடும்
இனிமையும் தனிமையும் ஏற்றமும் வளனும்
நனிமிகுந் திக்கால் நலிந்துயிர்ப் பின்றி
உறங்குறு மாக்கள் திறம்பெற் றெழுதர
அரிமாக் குரலின் உரிமை முழக்கிப்
பாட்டெனும் ஈட்டியால் எழுப்பினை மன்னே!
தறுகண் உறுசீர் முகனும் பீடுயர்
வெற்பின் அன்னநின் பொற்புறு தோளும்
வயக்களிற் றன்ன நடையும் இனியே
காண்குவங் கொல்லோ கனிவொடு நின்வாய்
மாண்புடை இன்சொல் கேட்குவங் கொல்லோ!
நின்னுறு விழுமம் போற்றுவ தன்றியாம்
சீருறச் செய்குவ தென்ன
பாரதி தாசப் பாவல ரேறே!

காவலனே ! ஞா. அந்தோனிராசு, விரியூர்.

நாக்கடிப் பிருப்ப வாய்ப்பறை முழக்கி நலம் பெறுவார்;
பாக்களும் புனைவார்; பட்டமும் பெறுவார்; பண்பிழப்பார்;
போக்கரும் பழியும் பரிவோ டேற்றுப் பொருள் குவிப்பார்;
போக்கிலி யவர் தமைப் பகலெனக் காய்ந்தாய் பாவலனே !

தண்டமிழ் நிலத்தில் தோன்றிய களையைத் தறித்தெறிந்தாய் !
எண்ண எரு ஊழ்த்துப் 'பா'நீர் பாய்ச்சிப் பயிர் வளர்த்தாய் !
ஒண்டமிழ் 'மலருங், காயுங், கனியும்' ஒருங்கணைத்துக்
கொண்டிடு முன்,ஏன் காலனைத் தொடர்ந்தாய்? காவலனே!

வேகத்தான் வேண்டும் இளமகன்.

அன்னை உறுதுயர்கண் டாற்ரு தொழிந்திடிற்பின்
உன்னை அவள்மகனென் ருருரைப்பர்? – அன்னைமொழி
உற்றதுயர் ஆற்றி; உயிரெனினும் ஈந்திடுவாய்;
பெற்ற தமிழ் வாழ்வாள் பொலிந்து.

சாகத்தான் வேண்டும் தமிழ்ப்பகைஞர்; செத்தொழிந்து
போகத்தான் வேண்டும் புலைத்தீயர் – என்ருல் நீ
ஏகத்தான் வேண்டும் களம் நோக்கி; என்றேனும்
வேகத்தான் வேண்டும் உடல்.

கூற்ருல் மறையானெங்கோ. கவிமுத்தம், பாளையங்கோட்டை.

பாரதிக்குத் தொண்டன் பழந்தமிழ்க்குத் தோழனவன்
காருதிர்த்த வெள்ளக் கருத்தாளன் – நேரெதிர்த்து
மாற்றுக் கொடும்பகையை மாய்த்து வழிநடந்தான்;
கூற்ருல் மறையானெங் கோ !

பொதியத்துத் தேய்வையினைப் பூந்தமிழை மந்தி
மதிகொண்ட இந்தி வளைக்க – கொதியுற்றுப்
பந்தத்தால் நாவெடுத்துப் பாவதனுல் வாள்வடித்தான்!
எந்தமிழ்க்கே சூள் முடிப்போம் இன்று !

பிரிவு. புலவர். தமிழ் ஒளி, ஆம்பற்பட்டு.

நற்றமிழின் பாவேந்தே! உனது பாட்டால்
நலிவுற்ற குமுகாயம் மீட்சி எய்தும்.
கற்கண்டின் கனிச்சுவையும் தோற்கும்; மங்கை
கனிமுத்து பூவிதழின் சுவையும் தோற்கும்

பெற்றெடுத்த மழலை மொழிப் பேச்சும் தோற்கும்
பிறக்கின்ற யாழினது இசையும் தோற்கும்
பெற்றவளாம் தமிழன்னை வாட; உன்றன்
பிரிவாலே ஒளியிழந்து வாழ்கின் றளே.

ஈடாமோ ? மன்றவாணன், சென்னை—கஉ

நகைப்பிற் கிடந்தரும் மன்பதையின் வாழ்வும்
வகையறியா நந்தமிழர் தாழ்வும் – பகையேற்கும்
புல்லர்தம் வெற்றுரையும் பாரதி தாசன்முன்
நில்லா தமிழ்ந்ததே நன்கு!

கலிசேர்க்கும் வெண்ணிலவின் தண்மையும் கற்றோர்
கலிதீர்க்கும் ஒண்பொருளின் வைப்பும் – நலிவிலா
ஆனமுதும் பாரதிநல் தாசனின் நற்றமிழ்த்
தேனமுதுக் கீடோ தெளி!

பாவேந்தன் சென்றான் பறந்து! கோம்பை. முத்துரெங்கராசன்.

கன்னல் நறுஞ்சாற்றைக் கற்கண்டைப் பாகன்ன
பண்ணில் இணைத்துப் பகிர்ந்தளித்தோன் – தென்புலத்தே
மாவேந்தர் சீர்பாடி மாத்தமிழைக் காத்திருந்த
பாவேந்தன் சென்றான் பறந்து!

ஆவியும் பால்போல் அமுதீயும் நற்சுவைபோல்
பாவியும் வெற்றிப் பெரும்புலவா! – சாவேந்த
வா,வேந்தே என்றாரோ வானவரும் என்பெருமைப்
பாவேந்தன் சென்றான் பறந்து!

வாழும் நின் புகழ்! புதுவை அருணன்.

தமிழ்ச்சோலை தன்னிற் பூத்த
தனித்தமிழ்ப் புரட்சி வேந்தே!
அமிழ்தான இனிய நல்ல
அருந்தமிழ்ப் பாக்கள் யாத்தாய்!
அமிழ்தென்றல் ஊறும் இன்ப
அருஞ்சுவை போலும் நின்றன்
தமிழிசை தமிழர் யார்க்கும்
தனிச்சுவை தந்து வாழும்!

ஏன் எழுதுகின்றேன் ? இளங்கோ, சித்தர்காடு

பொதுவுடைமை தனியுடைமை புரட்சி பேசிப்
புடைபுடைக்கப் படைகொண்ட போலி அல்லன்;
பதுமைகளாய்ப் படுத்துறங்கிப் புதுநாள் பார்த்துப்
பகட்டுக்குப் பாட்டெழுதும் பதரும் அல்லன்;
மதுகுடித்த மயக்கத்தில், மங்கை தொட்ட
மையலிலே மனமிளகிப் போன போக்கில்,
முதுபுலமைத் திறங்காட்டி, முண்ட மான
மொழிக்குள்ளே மொய்க்காத தேனீ யானுன்.

பொன்னுக்கே பண்ணிசைத்த கம்பன், அன்று
புரந்தோனைப் போற்றிபமா மன்னன்; இன்று
"புண்ணுக்கே புனுகொத்த பாடல்; பூத்துப்
பூரித்தேன் மெய்பொடிந்தேன்" என்று கூறி,
முன்னுக்கே வழிகாட்டி ஊக்க மூட்டும்
மூதறிஞர் தோழமையை முறிப்பார் உண்டே;
பொன்னுக்காய்ப் புனைகின்ற பாக்கள் எல்லாம்
பொய்மைக்கே பிறக்கின்ற ஈக்கள் ஆமே!

புகழ்கின்ற வெற்றுரையில் புகுந்தே, பேரும்
பொற்கிழியும் திரட்டிய பின் புயலாய் மாறித்
திகழ்கின்ற பாசறையைத் திட்டிக் கொட்டித்
தேசீயம் ஒருமைப்பா டென்கின் றுரே!
இகழ்கின்ற எச்சிலிலே நாய்கள் போன்ற
இழிமக்கள் தாம் வாழ எதையும் செய்வார்!
நிகழ்கின்ற காலத்தின் நேர்மை மிக்க
நேயத்தார் ஆபத்தார் மாண வன்றுன்!

மொழிகாக்க முற்பட்டார், மோதும் சட்ட
முகங்கண்டு முரண்பட்டுப், பதவி பட்டம்
விழி கேட்கக் குறிக்கோளை விற்று வீழ்ந்தார்;
"வெடிகுண்டு விழுந்தாலும் எங்கள் தாயின்
பழிநீக்கிப் பாராள வைக்கக் காலைப்
பகலவன்போல் முகில் கிழித்துப் பகைபைச் சாய்த்து
வழிமீட்க வகைசெய்வோம்" எனமார் தட்டும்
வரிப்புலியின் வழிவழியின் முதல்வன் அன்னேன்!

கொடுங்கோலர் கொடுஞ்செயலைக் குடைந்து காட்டும்
குத்தீட்டி யாமன்னுன் எழுது கோலே;
கொடுங்கோலக் காட்சி யெலாம் கண்டும் கேட்டும்
கேடயமாம் நெஞ்சத்தில் கிளறக் கிண்ட
நெடுங்காலத் தமிழ் மரபின் நிழலில் உள்ளம்
நெக்குருக நற்படைப்பை நெய்தோன் அன்னேன்
கடுங்காலன் கைப்பிடியில் சிக்கினுலும்
கன்னிமொழிக் கவன்செய்த கடமை யீதே!

ஒரு நற்செய்தி.

இவ்விதழ் முழுக்க முழுக்க தென்மொழி அச்சகத்திலேயே அடிக்கப் பெற்று வெளிவருகின்றது என்பதை எண்ணுகையில் நமக்கெல்லாம் மகிழ்ச்சி, நிறைவு! அவற்றின் விளைவாக நமக்கு என்றுமில்லாத ஒரு புதிய தெள்பு! முனைப்பு! இதைப்பற்றி எண்ணுகையில் நாம் பட்ட தொல்லைகள், துயரங்கள். இழிவு, ஏமாற்றங்கள் எல்லாம் மறந்து போகின்றன. ஆனுல் இத்துடன் நம் முயற்சியும் வினைப்பாடுகளும் முடிவுற்றனவா? இல்லவே இல்லை; இப்பொழுதுதான் அவை தலையெடுக்கின்றன!

நாம் தென்மொழிக்காக அமைக்க வேண்டிய முழு அளவான அச்சகம் இன்னும் உருவாகி விடவில்லை. நன்கொடையாகவும் கடனுகவும் நாம் பெற்ற தொகையுடன் மேலும் பல்லாற்ருனும் முயன்று ஏறத்தாழ அதே அளவு தொகையைத் திரட்டி அச்சகத்தை விரைந்து அமைத்துள்ளோம். இன்னும் நமக்குத் தேவையான எழுத்துகள் பல! வெட்டுப் பொறி ஒன்று; மூன்று நான்கு சிறு சிறு பொறிகள்; ஆக எல்லாவற்றிற்கும் நாம் இன்னும் குறைந்தது மூவாயிர உருபா செலவிட்டாகல் வேண்டும். பொத்தக வெளியீட்டுப் பகுதியை வேறு நாம் தொடங்குதல் வேண்டும். இவையெல்லாம் அறிவுப் புரட்சி செய்யும் போர் மறவர்க்குத் தேவையான படைக்கலங்கள். அதுவரை நாம் ஓய்தலும் தலை சாய்தலும் பிழையானதும் கூடாததுமாகும்.

எனவே அன்பர்கள் மேலும் முனைப்பாக ஈடுபட்டுத் தென்மொழி அச்சக அமைப்புத் திட்டத்திற்கு உதவ வேண்டிக் கொள்ளுகின்றேன். இதுவரை நீங்கள் நீட்டிய அருள்கைகளையும் காட்டிய நகைமுகங்களையுமே இவ்விதழில் பக்கத்திற்குப் பக்கம் காண்கின்றீர்கள்! அவை என்றென்றும் உங்கள் அரவணைப்புக்குச் சான்று பகர்வன! தளர்வடைய வேண்டா. இறுதி வெற்றி தமிழுக்கே!

அன்பன்
பெருஞ்சித்திரன்.

மொழிப் பெரும்புலவர்

ஞா. தேவநேயப் பாவாணர்

பாடிய

இசைத் தமிழ்க் கலம்பகம்

பண் கூட்டிப் பாடுதற் கேற்ற

இந்தி எதிர்ப்புப் பாடல்கள்

விலை உருபா மூன்று

கிடைக்குமிடம் :

மணி

ஆ. 1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை

காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.